பக்கங்கள்: பதினாறு + II = 18

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 29 வெள்ளிக்கிழமை (14.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 261

# ஜனாதிபதி தேர்தலை நடத்தும் தார்மீக உரிமை எதுவும் மஹிந்தவுக்கு இல்லை

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல் என்று ஜே.வி.பி. சீற்றம்





கொழும்பு, ஒகஸ்ட் 14

ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் தார்மீக உரிமை எதுவும் மஹிந்த ராஜபக்ஷக்கு கிடையாது. 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் எட்டாம் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், இப்போதைய நிறைவேற்று ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அந்தப் பதவி ஒழிக்கப்பட வேண்டும்.

அவ்வாறிருக்க அடுத்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது என்பது நீதியற்றது; முறையற்றது.

இவ்வாறு ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பியின்) பொதுச் செயலாளர் ரின்வின் சில்வா ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பி வைத்த விசேட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் பாதுகாப்பு வலயப் பகுதியில் புதிய புதைகுழிகளைக் காட்டும் படங்கள்

### மே 24 ஆம் திகதி எடுக்கப்பட்டவற்றில் பதிவு எனத் தெரிவிப்பு

நியூயோர்க், ஒக்.14

வன்னியில் மிகக் கடுமையான மோதல்கள் இடம்பெற்ற பாதுகாப்பு வலயப் பகுதியில் புதிய புதைகுழிகள் தோண்டப்பட்டுள்ளமையை செய்மதிப் புகைப்படங்கள் உறுதி செய்துள்ளன என்று அமெரிக்காவின் விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையின் பாதுகாப்பு வலயம் என அழைக்கப்பட்ட பகுதிக்குள் கடுமையான (16 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் நீண்ட காலத் திட்டத்தின் பிரகாரமே கே.பி. கைதானார் என்கிறார் கோத்தபாய

கொழும்பு, ஒக. 14

விடுதலைப் புலிகளை சர்வதேச ரீதியில் பலவீனப் படுத்துவதற்காக அரசால் நீண்டகாலமாக (16 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் 12 தமிழ் இளைஞர் கைது

கொழும்பு, ஒக.14

கொழும்பில் கடந்த நான்கு நாள்களாக இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையில் 12 தமிழ் (16 ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸார் கைது செய்த இளைஞர்கள் இருவர் சடலங்களாக மீட்பு; அங்குலானையில் முறுகல்!

## கரையோர ரயில் சேவை பாதிப்பு; பொறுப்பதிகாரி இடமாற்றம்

கொழும்பு, ஒக. 14

இரத்மலானை, அங்குலானை பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்று கூறப்படும் இரு இளைஞர்கள் சடலங்களாக மீட்கப்பட்டமையை அடுத்து அங்கு பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நேற்று பெரும் முறுகல் நிலை ஏற்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியமையால் கரையோர ரயில் சேவை யும் தடைப்பட்டது. நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக அங்குலான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், ஏனைய ஆறு பொலிஸாரும் உடனடியாக இடம்மாற்றம் செய்யப்பட்டனர்.

அங்குலானயில் புதன்கிழமை மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்கள் லுனாவை மற்றும் இரத்மலானை பகுதிகளில் நேற்று அதிகாலை கண்டுபிடிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து அங்குலான பொலிஸ் நிலையம் முன்பாக அப்பகுதி (16 ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச்சுடர்**

**உள்ளே**

★தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக நடத்தப்படும் விசேட பயிற்சிப் பரீட்சையின் மாதிரி வினாத்தாள்கள்

**நாளை**

★தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக நடத்தப்படும் விசேட பயிற்சிப் பரீட்சையில் யாழ்.பிரபல ஆசிரியர் வே.அன்பழகன் தயாரித்து வழங்கும் விசேட மாதிரி வினாத்தாள்.

# கொழும்பில் விடுதலைப் புலிகளை அழிக்கும் வரை பாதுகாப்பு நடவடிக்கைகள் தளர்த்தப்படமாட்டா

## தலைமை இல்லாத போதிலும் சதிவேலைகளில் ஈடுபடக்கூடும் என்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, ஒக். 14

கொழும்பில் தலைமறைவாகவுள்ள விடுதலைப் புலிகள் கைது செய்யப்படும் வரை அல்லது கொல்லப்படும் வரை தலைநகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தளர்த்தப்படமாட்டா என்று இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி ரொய்ட்டர் செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

மேலும் சமீபத்தில் வெடிமருந்து நிரப்பப்பட்ட வான் கண்டுபிடிக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் விடுதலைப் புலிக (16 ஆம் பக்கம் பார்க்க)

# அரசுக்கு எதிராகப் புதிய கூட்டணி; பிரதான எதிர்க்கட்சிகள் இணக்கம்

## செப்ரெம்பர் மூன்றாம் வாரத்தில் ஒப்பந்தம் கைச்சாத்து?

கொழும்பு, ஒக்.14

அரசுக்கு எதிராக புதிய வலுவான கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சிகள் பரஸ்பரம் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன என்று தெரிய வருகிறது.

இக் கட்சிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணித் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவிற்கான இலங்கை பிரதிநிதியாக ஹோகன்ன

கொழும்பு, ஒக.14

ஐ.நாவிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதியாக நியூயோர்க்கில் தங்கியுள்ள எச்.எம்.எஸ். பலியகாரவின் இடத்திற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டாக்டர் கோகன்ன நியமனம் பெறவுள்ளார். அடுத்த மாதம் 10ஆம் திகதி அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தென்மராட்சி கிழக்குப் பகுதி நெல் வயல்நிலங்களை உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஓக.14

தென்மராட்சி தெற்கு உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் உள்ள வயல் நிலங்களை அப்பகுதி மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 11.30 மணிக்கு கைதடி, நாவற்குழி முருகன் கோயில் முன்றலில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ (ஜே 298), கைதடி-நாவற்குழி (ஜே 297), தனங்கிளப்பு (ஜே 299) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட மக்களுக்கே வயல் நிலங்கள் கையளிக்கப்படவிருக்கின்றன.

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர் நா.சிவதிருச்செந்துநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சாவகச்சேரி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கமநல உதவி ஆணையாளர் பற்றிக் நிறஞ்சன், சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் எஸ்.சிவராஜலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்தப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்களையும் இந்தபகுதியில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி தெற்கு மீள்குடியமர்வோர் சங்கத்தின் செயலாளர் தி.தங்கவேலு கேட்டுள்ளார்.

நுணாவில்,கொல்லங்கிராய் வீதியூடாகவும் கேரதீவு வீதியூடாகவும் மக்கள் நிகழ்வுக்கு வருகை தரலாம் என்றும் -

மக்கள் வசதி கருதி நாவற்குழி-கேரதீவு வீதியூடாகவும் தனங்கிளப்பு சந்தி, சாவகச்சேரி வரையிலும் போக்குவரத்துச் சபையின் பஸ்சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும்-அவர் தெரிவித்தார். (1-207)



கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான க.பொ.த. உயர்தரப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் சுமுகமாக நடைபெற்று வருகிறது. தோற்றுவதற்காக வந்து கொண்டிருக்கும் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# யாழ்.நகரப்பகுதி வீதிகளில் வீதி விளக்குகள் எரிய வேண்டும்

## ஆளுநர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை

யாழ்ப்பாணம், ஓக.14

யாழ்.நகரப் பகுதியெங்கும் வீதி விளக்குகள் ஏரிய வேண்டும் என வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் எஸ்.ஏ.சந்திரசிறி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணித்துள்ளார்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த யோசனைக்கமைய இப்பணிப்புரையை விடுத்துள்ள ஆளுநர் யாழ். நகரப் பகுதிகள் தோறும் வீதி விளக்குகள் எரிய வேண்டும் என்றும் யாழ்.உள்ளூராட்சி சபையும் மின்சார சபையும் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (1)

# நெடுந்தீவில் கடல் ஆழமாக்கும் திட்டம்

நல்லூர், ஓக. 14

நெடுந்தீவு தூண்காலை மீனவர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு 'லாப்' திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட பகுதியில் படகுகள் நிறுத்தக்கூடியதாக கடல் ஆழமாக்கும் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்கென ரூபா 2 மில்லியன் நிதியுதவி கிடைத்துள்ளதாகவும் கடல் ஆழப்படுத்தப்படுவது குறித்த ஒப்பந்தம் பூர்த்தியடைந்துள்ளதாகவும் யாழ்.மீள்எழுச்சித் திட்ட பிரதி முகாமையாளர் தெரிவித்தார். (1-111)

# தரம் 5 மாணவர்களுக்கான பரீட்சை செயலமர்வு நாளையும், ஞாயிறும் கோப்பாய் கலாசாலையில்

யாழ்ப்பாணம், ஓக. 14

இவ்வாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான வெற்றித் தேர்வு பரீட்சைத் தொடரின் இறுதிப்பரீட்சைச் செயலமர்வு நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளையின் ஆலோசனை, வழிகாட்டலில் நடைபெறும் இக் கருத்தரங்கில் திருமலை எஸ்.கணேசலிங்கம், இலங்கை சாதனை ஆசிரியர் கே.தவயோகராஜா, விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன், யாழ்.முன்னணி ஆசிரியர் கே.கைலநாதன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொள்வர்.

நாளை மாலை 2 மணிக்கு யாழ்.கல்வி வலய மாணவர்களுக்கு நடைபெறும். அன்றைய நாள் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் வடவலய உதவி முகாமையாளர் க.ஆனந்தராஜா கலந்து கொள்வார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வடமராட்சி கல்வி வலய, தீவக வலய மாணவர்களுக்கு நடைபெறும். அன்றைய நாள் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் செல்வி மலர் சின்னையா கலந்து கொள்வார்.

அன்று மாலை 2 மணிக்கு தென்மராட்சி கல்வி வலய, வலிகாமம் கல்வி வலய மாணவர்களுக்கு நடைபெறும். அன்றைய நாள் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் வி.அருளானந்தம் கலந்து கொள்வார்.

**தவறிவிட்டது**

ஐயாத்துரை தவசீலன் ஆகிய எனது மோட்டார் சைக்கிள் இன்சுரன்ஸ், இராணுவ பாஸ், வாகன (IC) காப்புறுதிப்பத்திரம் ஆகியன கொக்குவிலுக்கும் தெல்லிப்பழைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் T.P:-0602219378 அல்லது இல.55, ரயில்நிலைய வீதி, கொக்குவில் கிழக்கு என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**கோழிக் குஞ்சு விநியோகம்**

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 14.08.2009 விநியோகிக்கப்படும் பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

★ ராஜீன்
கால் நடைத் தீவன விற்பனை நிலையம்
ஆனைக்கோட்டைச் சந்தி
T.P No - 021 222 2867

**லண்டனில் உயர்கல்வி வாய்ப்புக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

(148, கோயில் வீதி, யாழ்ப்பாணம் யுனிசேவ் முன்பாக)

மேற்படி லண்டனில் உயர்கல்வி கற்க விரும்புவோர் நேரடி ஆலோசனை பெற விரும்பின் 41 1/5, 42ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை என்னும் முகவரியில் எமது லண்டன் ஆலோசகரை நேரில் (14.08.2009) இன்றும், (15.08.2009) நாளையும், (16.08.2009) நாளை மறுதினமும் (வெள்ளி, சனி, ஞாயிறு) சந்திக்கலாம்.

இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆலோசனை பெற்று உங்கள் பயண ஒழுங்கை உறுதிப் படுத்திக் கொள்ளவும்.

எந்நேரமும் தொடர்பு: 0774528818

**தரம்:4 முதல் 10 வரை**

3ஆம் தவணை புதிய அனுமதிகள்

வெற்றித்தேர்வு பரீட்சையோடு 2008 அகில இலங்கை ரீதியாக சாதனை படைத்த எமது ஆசிரியர் K.தவயோகராஜா மற்றும் பிரபல ஆசிரியர் K.K.கைலநாதன் ஆகியோரின் நேரடி வழிகாட்டலில் 2010 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு விசேட வகுப்புகள் 23.08.2009 ஆரம்பம்.

GR:6&7 ENGLISH MEDIUM

இன்று முதல் வழங்கப்படுகின்றன.

உங்கள் பிள்ளை தரம்:4இல் கற்ற படிமுறைகளோடு பல்கலைக் கழகம் செல்ல, ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் கல்வியைத் தொடர, உங்கள் கற்பனை நிஜமாக இன்றே இணையுங்கள்

சயன்ஸ் அக்கடமி. நல்லூர்.அரியாலை

வெளிவந்து விட்டது-
O/L சுகாதாரம் உடற்கல்வி வினா விடை
ஸபான் எழுதிய தரம்:5 புலமைப்பரிசில் இறுதி வழிகாட்டி
பூபாலசிங்கம், அன்னை, துர்க்கா, மொடேன்

தரம்:5 வெற்றித்தேர்வு செயலமர்வு

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில்

புதிய நேர அட்டவணை

15.08.2009 பி.ப.2மணி யாழ் கல்வி வலயம்
16.08.2009 மு.ப.8.30மணி வடமராட்சி,தீவகம்
16.08.2009 பி.ப.2மணி தென்மராட்சி,வலிகாமம்

மேலதிக தகவலுக்கு: 021229016, 0602217191, 0212263815

# மரண அறிவித்தல்

## அருள்பணி பிலிப்பையா யேசுநேசன் (அமதி)

யாழ். அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருள்பணி பிலிப்பையா யேசுநேசன் (அமதி) கொழும்பில் நேற்று (13.08.2009) வியாழக்கிழமை காலமானர்.

அன்னாரின் ஆசியப் பிராந்திய அமலமரித் தியாகிகள் சபையின் முன்னை நாள் பொது ஆலோசகரும், யாழ்.அமலமரித்தியாகிகள் சபையின் முன்னை நாள் முதல்வரும், யாழ்.மாகாண அமலமரித் தியாகிகளின் ஆலோசகரும், தூயடிமசனட் உயர்குருமட அதிபரும் தூய பத்திரிசியார் கல்லூரியின் முன்னைநாள் உப அதிபருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

657/1 மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

மாகாண முதல்வர் அமலமரித்தியாகிகளின் குழுமம்.

## திருமதி வாரித்தம்பி அப்பாக்குட்டி



கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வாரித்தம்பி அப்பாக்குட்டி நேற்று (13.08.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வாரித்தம்பியின் அன்பு மனைவியும், கணேசமூர்த்தி, சடாச்சரம்(ஆசிரியர்), தவேந்திரம், நவரத்தினம்(ஜேர்மனி) பொன்னம்பலம் (அமரர்), மனோன்மணி (சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசலட்சுமி, மகேஸ்வரி, யோகேஸ்வரி, பாக்கியலட்சுமி கருணராஜா(அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வநாதன், செல்வநந்தினி, செல்வபாலன், செல்வசுயந்தினி, அகிலன், மயூரன், தவநிதி, சிவாசினி, சுபாசினி, அனு, சசி, விஸ்னுகா, காயத்திரி, யதுகுலன் ஆகியோரின் பேர்த்தியும் விதுர்னா, நிஜீவன், தக்ஷாயினி, சர்ருஜன், தருசனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (14.08.2009) பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 3 மணிக்கு கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னம்பலம் வீதி, கல்வயல், சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.

**பழமுதிர்ச்சோலை (குளிர்பான நிலையம்)**

624 A, பருத்தித்துறை வீதி, நல்லூர் (நல்லூர் கந்தன் ஆலய முன்பாக)

எமது நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்களுக்கு

ஓர் நற்செய்தி

நல்லூர் கந்தன் உற்சவ 22 ஆம் நாளான மாம்பழத் திருவிழா (17.08.2009 ஆம் திகதி, திங்கட்கிழமை) அன்று அதிகாலை முதல் மாலை வரை

வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கும் அன்றைய வருமான முழுத் தொகையினையும்

புற்று நோயினால் பாதிப்புக்குள்ளான எமது சக உறவுகளின் நல் வாழ்விற்காக மனமுவந்தளிக்க முருகன் துணையுடன் முன்வந்துள்ளோம்

எனவே பக்தர்கள் அனைவரும் உற்சவ தினம் பெருந்திரளாக வந்து

எமது பழமுதிர்ச்சோலை நிறுவனத்திற்கு தங்கள் பேராதரவை நல்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்களும், ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சிறுபான்மைக் குழுமங்களின் தனித்துவத்தை அடியோடு சிதறடிக்கும் எத்தனம்தான் இது!

கடந்த மே மாதத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அடியோடு அழித்து வெற்றி கொண்டாடியாயிற்று என்ற பெருமிதத்தோடு நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த உரையின்போது ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார். அதற்கு அர்த்தம் புரியாமல் பலரும் பலவிதமாக விமர்சிக்க முற்பட்டனர். ஆனால், அந்த வாசகத்தின் பொருள் என்னவென்பது இப்போதுதான் மெல்ல, மெல்ல புலனாகும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

''இந்தத் தேசத்தில் இனி சிறுபான்மை இனம் என்று ஒன்று இல்லை.'' - என்று அப்போது ஜனாதிபதி முழங்கியிருந்தார். இக்கருத்தே சர்ச்சைக்கு உள்ளானது.

இத் தேசத்தில், சிறுபான்மையினர் - பெரும்பான்மையினர் என்ற வேறுபாடு இனி இல்லை என்பதையே அவர் அப்படிக் குறிப்பிட்டார் என்றனர் சிலர். தனியாக சிறுபான்மை இனம் என்று குறிப்பிடாமல் 'இந்தத் தேசத்தில் இனி சிறுபான்மை இனம், பெரும்பான்மை இனம் என்ற வேறுபாடு இருக்காது' என்று தெளிவாக இரு இனச் சாராரையும் குறிப்பிட்டு அவர் கூறியிருந்தால் பிரச்சினையே வந்திருக்காது என்று சுட்டிக்காட்டினர் மற்றொரு சாரார்.

இல்லை, இல்லை, சிறுபான்மை இனமே இத் தேசத்தில் இருக்கமுடியாத நிலைமை ஏற்படுத்தப்படும் என்பதையே அவர் மறைபொருளாகக் கூற முற்பட்டார் என்று வியாக்கியானம் செய்ய விழைந்தனர் சிலர். இப்போது இந்த மூன்றாவது சாராரின் கருத்தை வலியுறுத்துவது போல விடயங்கள் அரங்கேறுகின்றமைதான் பெரும் அதிர்ச்சியை அளிக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை பெரும்பான்மையினத்திடம் மட்டுமே ஆட்சி அதிகாரம் குவிந்து கிடக்கின்றது. ஜனநாயகப் பண்பியல்பின் பிரதான பின்னடைவு இது என இப்பத்தியில் சில சமயங்களில் விமர்சித்தும் வந்திருக்கின்றோம். பெரும்பான்மை இனத்தின் அடக்குமுறையிலிருந்து நீதி, நியாயம், உரிமை கோரியே சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்கள் பல வழிகளிலும் போராடி வந்திருக்கின்றனர். இதுவே நமது கடந்த ஆறு தசாப்தகால சரித்திரமும் பட்டறிவும் கூட.

எனவே, பெரும்பான்மை இனத்தவரிடம் அதிகாரம் குவிந்து கிடக்கையில், சிறுபான்மை இனத்தவர்கள் - அவர்கள் வடக்கு, கிழக்குத் தமிழரோ, மலையகத் தமிழரோ அல்லது முஸ்லிம்களோ யாராகவும் இருக்கட்டும் - அவர்கள் தமது தனித்துவப் பண்பியல்புகளையும் இன, மத, குழும அடையாளங்களையும் பேணுவதற்காக ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமானதாகும்; தவிர்க்க முடியாததாகும்.

தொழிலாளர்கள் தமது நலனுக்காக எப்படி ஒன்றுபட்டு செயற்பட விழைகின்றார்களோ -

மகளிர் தமது மேம்பாட்டுக்காக எப்படி ஐக்கியப்பட்டு செயற்பட முனைகின்றார்களோ-

இவ்வாறு சமூகத்தின் இன்னோரன்ன வகுப்புப் பிரிவுகளில் - வர்க்க நிலைகளில் - உள்ளோர் தமது பிரிவின் நலன் கருதி ஒன்றிணைந்து செயற்பட எவ்வாறு எத்தனிக்கின்றார்களோ -

அதுபோலவே, சிறுபான்மையினர், சிறுபான்மை மதக் குழுவினர், சிறுபான்மை இனத்தவர்கள் போன்றோரும் தத்தமது இன, மத அல்லது குழும நலன் கருதி ஒன்றுபட்டு, கூட்டு இயல்பாக செயற்பட முனைவது வழமையானது. அவர்களைப் பொறுத்தவரை அது அத்தியாவசியமான - தவிர்க்க இயலாத - கடமையும் கூட.

அரசியல் ரீதியில் அத்தகைய நடவடிக்கைகளுக்கு அடியோடு ஆப்புவைக்கும் எத்தனம் அரசுத் தரப்பால் சத்தம் சந்தடியின்றி இப்போது எடுக்கப்பட்டிருக்கின்றமை அதிர்ச்சி அளிக்கின்றது.

இன, மதக் குழுக்களின் பெயருடன் இயங்கும் அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை இரத்துச்செய்து, அக்கட்சிகள் நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதைத் தடைசெய்யும் வகையிலான சட்டமூலத்தை அரசு நாடாளுமன்றில் சமர்ப்பித்திருக்கின்றமை, சிறுபான்மை இனத்தவர்கள், சிறுபான்மை மதத்தவர்கள், தங்களின் குழுமத்தின் நலனைப் பேணும் மற்றும் தமது சமூகத்தின் வாழ்வியலை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஐக்கியப்பட்டு, ஒன்றிணைந்து செயற்படுவதற்கு வைக்கப்படும் பெரும் ஆப்பாகவே கருதவேண்டும்.

'சிறுபான்மை இனம் என ஒன்று இனி இத்தேசத்தில் இல்லை' என்று மூன்று மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறிய கருத்தின் அர்த்தத்தை, சத்தம் சந்தடியின்றிக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டமூலத்தின் பின்னணியில் நோக்கும்போது சில கருத்துக்கள் தானாகவே புலப்படுகின்றமை வெளிப்படை.

இந்தச் சட்டமூலத்தை எதிர்த்து பிரதான எதிர்க்கட்சிகள் உயர்நீதிமன்றுக்குப் போயிருக்கின்றன. அவற்றின் ஆட்சேபனையை ஏற்று, இச்சட்டமூலத்தை நாடாளுமன்றில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றி சட்டமாக்க முடியாது என நீதிமன்றம் தீர்ப்புக் கூறலாம். நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவுடன் அதனை நிறைவேற்றி, கருத்துக் கணிப்பு (சர்வஜன வாக்கெடுப்பு)மூலம் இச்சட்டமூலத்துக்கு மக்களின் அனுமதியும் பெற்றால்தான் இது சட்டமாக வரமுடியும் என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கலாம்.

ஆனால் உயர்நீதிமன்றம் அப்படி உத்தரவிட்டாலும் கூட -

யுத்த வெற்றியை அடுத்து, பேரினவாதத்தின் மிதப்பின் உச்சியில் திகழும் தென்னிலங்கை அந்தத் தேவைப்பாடுகளையும் இலகுவாக நிறைவுசெய்து, இந்தச் சட்டமூலத்தை சட்டமாக்கினாலும் இன்று ஆச்சரியப்படுவதற்கில்லை.

# நீதிமன்றங்களின் கட்டடத் தேவைகளை அறிந்துகொள்ள நீதியமைச்சர் மிலிந்த மொறகொட யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், ஒக.14

யாழ். மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்களை அமைப்பது குறித்து ஆராய்வதற்கு நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா இத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டும் எனவும் இந்தத் திட்டமும் 'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா கோரிக்கை விடுத்திருந்தார்.

அண்மையில் யாழ். பொது நூலகத்தில் நடைபெற்ற "வடக்கின் வசந்தம்'' அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்து கொண்ட வடக்கு மீள் குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷவிடமே நீதிபதி இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷ நீதியமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் பேச்சு நடத்தினார். அதனையடுத்து நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்களை அமைப்பது குறித்து நேரடியாக ஆராய்வதற்காக நீதியமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தம்முடன் தொலை பேசியில் உரையாடிய போது தெரிவித்தததாக மேல் நீதிமன்ற நீதிபதி தெரிவித்தார். (50)

## கனிஷ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி

யாழ்ப்பாணம், ஒக.14

சர்வதேச கனிஷ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிக்கான 6 ஆவது தெரிவுப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரை யாழ். பல்கலைக்கழக பௌதிகவியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. போட்டிக்கு விண்ணப்பித்த மாண வர்களை நேரடியாகப் பரீட்சை மண்டபத்துக்கு காலை 8.30 மணிக்கு வருகை தந்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு போட்டிக்கான வடமாகாண இணைப்பாளர் கலாநிதி நா.சிவயோகன் தெரிவித்துள்ளார். (203)

## தேர்வு வழிகாட்டிப் பயிற்சி

காரைநகர் பிரதேச பாடசாலைகளில் தரம் 4, தரம் 5 வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான வழிகாட்டல் பயிற்சித் தேர்வு எதிர்வரும் திங்கட்கிழமை காரைநகர் பாடசாலைகளில் காலை 9 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது. காரை மத்தி மேம்பாட்டுக் கழகத்தினால் மாதாந்தம் நடத்தப்படும் இந்த வழிகாட்டல் பயிற்சித் தேர்வில் தரம் 5 மாணவர்களுக் கான இறுதிப் பரீட்சையாக இது நடைபெறவுள்ளது. (203-250)

# சிறுவர் வைத்தியசாலை அமைப்பது குறித்து வடக்கின் வசந்தம் கூட்டத்தில் ஆராய்வு

கொழும்பு, ஒக.14

யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளையும் கொண்ட கொழும்பிலுள்ள லேடி றிஜ்வே வைத்தியசாலைக்கு நிகரான சிறுவர் வைத்தியசாலையொன்றை அமைப்பது தொடர்பாக வடக்கின் வசந்தம் இரண்டாவது அபிவிருத்திக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி தலைமையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வடக்கின் வசந்தம் இரண்டாவது அபிவிருத்திக் கூட்டத்தில் சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

80 மில்லியன் ரூபா செலவில் 100 படுக்கை அறைகளுடன் கூடிய இந்தச் சிறுவர் வைத்தியசாலையை எங்கு அமைக்கலாம் என்பது குறித்தும் ஆளுநர் உரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார்.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் அபிவிருத்திகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்களை கேட்டறிந்து கொண்ட ஆளுநர், எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டிருக்கும் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி பற்றியும் பேச்சு நடத்தினார்.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ், பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி, ஆளுநரின் செயலாளர் விஜயலக்ஷ்மி ரமேஷ், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர். ரவீந்திரன் உள்ளிட்ட பல அமைச்சுகளின் செயலாளர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.(50)

# பல்கலைக்கழகத்தில் ஊழியர் நலன் திட்டங்களை முன்னெடுக்க ரூபா 100 மில்லியன் வழங்க அமைச்சர் டக்ளஸ் இணக்கம்

யாழ்ப்பாணம், ஒக.14

யாழ். பல்கலைக்கழகத்தில் பல்வேறு ஊழியர் நலன் திட்டங்களை நடைமுறைப்படுத்த 100 மில்லியன் ரூபாவை வழங்க சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சருக்கும் ஊழியர்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

அச்சந்திப்பில் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற நூறு மில்லியன் ரூபாவை வழங்க அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஊழியர்சங்கம் முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு:-

* பல்கலைக்கழக ஊழியர்கள் ஓய்வு எடுக்க பொது அறை ஒன்று அமைக்கப்பட வேண்டும்.
* வரவேற்பு மண்டபம் ஒன்று அமைக்கப்படவேண்டும்.
* மாணவர்களுக்குப் பரீட்சை மண்டபம், பாதுகாப்பு ஊழியர்கள், சாரதிகள் தங்க அறைகள், புதிதாக இலங்கை வங் கிக்கு தனி அறை, கீழ் தட்டு வாக னத்தரிப்பிடம் ஆகியன அமைக்க வேண்டும்.
* பல்வேறு வசதிகள் கொண்ட கட்டடம் அமைக்க வேண்டும்.
* பல்கலைக்கழக ஊழியர்களின் பிள்ளைகளுக்கு அமைச்சு ஊடாக வேலைவாய்ப்பு வழங்க வேண்டும்.
* நிஷா புயலால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு இழப்பீடு கிடைக்க உதவவேண்டும். (1)

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம்,ஒக.14

வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு இரத்ததான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வல்வை, வடமராட்சி மக்களின் ஏற்பாட்டில் இந்த இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்களை இதில் கலந்து கொண்டு உயிர்·காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

# சுகாதார அமைச்சினால் அனுப்பப்படும் சுற்று நிருபங்கள் தனிச் சிங்களத்தில்

யாழ்ப்பாணம்,ஒக.14

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சினால் வடக்கு மாகாணத்தில் இயங்கும் சுகாதாரத் திணைக்களம் மற்றும் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் சுற்று நிருபங்கள் மற்றும் அவசிய கடிதங்கள் பல தனிச்சிங்களத்தில் மட்டுமே கிடைப்பதாக-

இந்த விடயங்கள் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கமுடியாத நிலை காணப்படுவதாக இங்கு கடமைபுரியும் உயர் அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த அலுவலகங்களில் சிங்களம் தெரிந்த தமிழ் ஊழியர்கள் சிலர் கடமைபுரிந்தாலும் தனிச் சிங்களத்தில் மட்டும் இக் கடிதங்கள் மற்றும் சுற்று நிருபங்கள் கிடைப்பதனால் மொழிபெயர்ப்பதில் சிரமங்கள் ஏற்படுவதாலும் இதனால் குறிப்பிட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50- 300)

# கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஏ-9 ஊடாக தினமும் 60 லொறிகளில் பொருள்கள் எடுத்துவர ஏற்பாடு செய்ய வேண்டும்

## ஆளுநரிடம் கோருகிறது வணிகர் சங்கம்

யாழ்ப்பாணம், ஒக. 14

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஏ-9 பாதையூடாக தினமும் 60 லொறிகள் வருவதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

யாழ்.வணிகர் கழகம் மேற்கண்ட கோரிக்கையை வடக்கு மாகாண ஆளுநரிடம் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த வடக்கு ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை வணிகர் கழகப் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியபோது மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

* குடாநாட்டுக்கு மாதாந்தம் கப்பல் மூலம் 25,000 மெற்றிக்தொன் பொருள்கள் எடுத்துவரப்பட்டன. ஏ-9 வீதியூடாக 10 ஆயிரம் மெற்றிக்தொன் பொருள்களே எடுத்து வரப்படுகின்றன. தினமும் 30 லொறிகள் மூலமே இவை எடுத்து வரப்படுகின்றன. தினமும் 60 லொறிகள் வருவதற்கு அனுமதி வழங்கினால் யாழ்ப்பாணத்தில் பொருள்களுக்கு பற்றாக் குறை ஏற்படாது.
* கொழும்பில் இருந்து ஒருலொறி யாழ்ப்பாணத்துக்கு வந்து திரும்ப 7 முதல் 10 நாள்கள் செல்கின்றன. அந்தக் காலத்தை குறைப்பதன் மூலம், பொருள்கள் எடுத்து வருவதற்கான செலவைக் குறைக்க முடியும். காலதாமதங்களையும் தவிர்க்கலாம்.
* அநுராதபுரத்தில் லொறிகள் காத்திருக்கும் வேளையில், சாரதிகள், கிளினர்கள் தங்குவதற்கு வசதியில்லை. அடிப்படை வசதிகள் கூட அங்கு இல்லை.
* ஓமந்தை சோதனை நிலையத்தில் 'கன்ரீன்' ஒன்று திறக்கப்பட வேண்டும். (1)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 30 | 15.08.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | தசமி |
| | பி.இ. 04.12 வரை |
| நட்சத்திரம்: | ரோகிணி |
| | மாலை.06.51 வரை |
| சுபநேரம்: | 03.05 - 04.35 |
| ராகுகாலம்: | 09.05 - 10.35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






"ஹேமாஸ்" நிறுவனத்தின் "அருணோதயம்" அறிமுகவிழா நேற்று மாலை யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. "ஹேமாஸ்" நிறுவனப் பிரதிநிதிகள் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், அந்த நிறுவனத்தின் விற்பனை முகாமையாளர் அப்துல் மௌயூத் வரவேற்புரை நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹுசைன் ஈசுபாலி, முகாமைத்துவப் பணிப்பாளர் இமாய் பொன்சேகா ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

"அருணோதயம்" திட்டத்தை பிரதம நிறைவேற்று அதிகாரி, முகாமைத்துவப் பணிப்பாளர் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் இறுதி இருபடங்களிலும் காணலாம்.

*(படங்கள்: லக்ஸ்மன்)*

## மரண அறிவித்தல்

### நடராசசிங்கம் கிருபாகரன்
(ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசசிங்கம் கிருபாகரன் 12.08.2009 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் நடராசசிங்கம் - யோகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரம்சோதி மற்றும் அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் (யோகம்) அன்புக் கணவரும் சியானியின் (ஆண்டு 9, வேம்படி மகளிர் கல்லூரி) பாசமிகு தந்தையும் மதனாகரன் (சுவிஸ்), பாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரன் (கனடா), புவனேஸ்வரி (கனடா), நகுலேஸ்வரி, இராசேஸ்வரி (கனடா), ஈசா (சுவிஸ்), குகரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆனைக்கோட்டை வீதி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*

தகவல்:
குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு உடன் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் சகல வசதிகளும் உள்ள வீடு தேவை.

தொடர்பு: 077 8445065 (87874)

## புறொயிலர் கோழி தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழி மற்றும் கல்பேட், ஊர்ச்சேவல் உடன் தேவை. நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: [illegible],
61, இராமநாதன் வீதி, கலட்டி,
யாழ்ப்பாணம்.
077 3001763 (87875)

## தவறிவிட்டது

செல்லத்துரை செல்வநாயகம் என்பவரது தே.அ.அ. (490823050V) யாழ்ப்பாணத்திற்கும் நயினாதீவுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 6685099 என்ற தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (87878)

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் மாதாந்த உதவிக் கொடுப்பனவு

நவாலி, ஓக.14

சண்டிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம், காசநோய் புற்றுநோய் என்பவற்றிக்கான உதவிப்பணம் பெறுபவர்களினது ஓகஸ்ட் மாதத்திற்கான கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்

அத்துடன் புதிதாக விண்ணப்பம் செய்தவர்களுக்கு கடந்த ஜூலை மாதத்திற்குரியதும் இம்மாதத்திற்குரியதும் இரண்டு மாத கொடுப்பனவுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் சமூக சேவை உத்தியோகத்தர் ப.அருந்தவராசா தெரிவித்துள்ளார். (1-100)

## 13 கிராமிய வீதிகள் புனரமைக்கப்படும்

நல்லூர், ஓக. 14

குடாநாட்டில் பிரதேச சபைகளின் 13 கிராமிய வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

32 மில்லியன் ரூபா செலவில் 'ராப்' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படும் இவற்றில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சில வீதிகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த புனரமைப்புப் பணிகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மீள் எழுச்சித்திட்ட யாழ். பணிப்பாளர் தெரிவித்தார். (3-11)



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF AGRICULTURE
### ADMISSION OF PUBLIC OFFICERS
FOR DEGREE PROGRAMME IN B.Sc. AGRICULTURE (2008/2009)

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture University of Jaffna for Admission of Public Officers for degree program to follow B.Sc. in Agriculture as internal students for the Academic Year 2008/2009

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.

   OR

   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

   AND

2. Diploma in Agriculture (Course duration not less than 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age:** Candidate should be less than 45 years of age at the time of closing date of application.

Application forms may be obtained from the Assistant Registrar, Examinations and Admissions Branch, University of Jaffna, on a payment of Rs.50/- each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.50/- drawn in favour of the Bursar, University of Jaffna and a self addressed stamped envelope (for Rs.5.00) not less than 9"x4" size.

**Date of closing is 11th September 2009.**

Applications should be forwarded through the relevant Heads of Department. If not those applications will be rejected.

Selected candidates will be called to sit for a Written Test and an Oral Examination.

No application will be entertained after the closing date of application.

**REGISTRAR**
**13.08.2009** (C560306)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சபாபதி வீரசிங்கம்**
(யாழ்.மாநகரசபை ஓய்வூதியர் (சாரதி))

மண் மகிழ
04.11.1931

கண் நெகிழ
15.07.2009

அன்பின் திரு உருவாய் பாசத்தின் உறைவிடமாய்
பண்புள்ள தந்தையாய் நல்வழிகாட்டி நலமுடன் வாழ வைத்த
அன்புத் தெய்வம் மறைந்தின்று 31 நாள்கள் சென்றாலும்
மாறாது உங்கள் நினைவுகள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நாவலடிலேன்,
கொக்குவில் மேற்கு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(87879)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
05 ★ 05 ★ 1943



மறைவு
15 ★ 07 ★ 2009

### திருமதி பூமணி பிள்ளையினான்
(ஐயாத்துரை)

கடந்த 15.07.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்பு அன்னையின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டு எமது துயரில் பங்கு கொண்ட அன்புள்ளங்களுக்கும், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல விதத்திலும் உதவி, ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (14.08.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ *இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தரவும்.*

குடும்பத்தினர்.

இல.87, சந்தனமாதா கோயில் வீதி,
சுண்டிக்குளி. (87882)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிரல் அடையாளம் மூலம் வரவைப் பதியும் இயந்திரங்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன

## அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அவை அறிமுகம்

வலி.வடக்கு,ஓக.14

யாழ்.மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் ஆகியவற்றில் பணியாளர்களின் வரவைக் கைவிரல் அடையாளங்கள் மூலம் பதிவுசெய்வதற்கு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இதுவரை காலமும் குறிப்பிட்ட அலுவலகங்களில் பணியாளர்கள் வரவுப் புத்தகங்களில் கையொப்பம் இட்டு வந்தார்கள்.

கைவிரல் அடையாளங்கள் மூலம் வரவைப் பதிவுசெய்யும் இயந்திரங்கள் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு எடுத்துவரப் பட்டுள்ளன. இந்த இயந்திரங்கள் விரைவில் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் ஆகியவற்றில் பொருத்தப்படவுள்ளன. இவற்றில் பணியாளர்கள் தமது கைவிரல் அடையாளத்தை அழுத்துவதன் மூலம் தமது வரவைப் பதிவுசெய்து கொள்ளமுடியும்.

இந்த இயந்திரத்தின் பாவனை மூலம் வரவை பதிவுசெய்யும் செயற்பாடுகள் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சின் ஏற்பாட்டின்கீழ் இந்தப் புதிய வரவுப் பதிவு நடைமுறை முதற்கட்டமாக யாழ்.மாவட்டச்செயலகம், பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் ஆகியவற்றில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்தல் சம்பந்தமான பயிற்சி வகுப்புகள் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கணக்காளர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் ஆகியோருக்கு இந்த வாரஇறுதியில் பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன. (50-86)

## புற்றுநோய், காசநோயாளருக்கு உணவுப் பொதிகள்

நவாலி,ஓக.14

புற்றுநோய், காசநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சின் உதவியுடன் டென்மார்க் அகதிகள் பேரவையால் உணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.

இவற்றை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குச் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உரியவர்களைத் தவறாது வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறும் வருகைதர முடியாதவர்களுக்குப் பதிலாக உறவினர்கள் அவர்களின் அடையாள அட்டையுடன் சமுகமளிக்கமுடியும் என்றும் சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா தெரிவித்துள்ளார். (203-100)

## விளையாட்டு விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஓக.14

மானிப்பாய் ப.தெ.வ. அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படுகின்ற சண்டிலிப்பாய் கல்வளை பாரதி முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் சங்கத் தலைவர் அ.சரவணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ப.தெ.வ. அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொதுமுகாமையாளர் ஜே.பி.குணரட்ணமும் கௌரவ விருந்தினர்களாகச் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவசோதி மற்றும் வலிகாமம் ப.தெ.வ. அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி பொதுமுகாமையாளர் க.சுதாகரன் ஆகியோரும் கலந்துகொள்வர். (9)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.14

புத்தூர் கிழக்கு மகாத்மாஜி சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய மைதானத்தில் சனசமூக நிலையச் செயலாளர் கோ.குலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி கோ.வ.தமிழ்ச்செல்வன் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203)

* * *

சுழிபுரம்,ஓக.14

காலையடி ஸ்ரீமுருகன் முன்பள்ளியும் பனிப்புலம் அம்பாள் முன்பள்ளியும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் காலையடி மறுமலர்ச்சி மன்ற விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

மன்றத் தலைவர் அழ.பகீரதன் தலைமையில் விழா ஆரம்பமாகி நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆரம்பபிள்ளை பருவக்கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.குகனேசன் கலந்துகொள்வார். (203-28)

## "கனவுகளின் வாசகன்" கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.14

நெடுந்தீவு வி.முகிலனின் ''அகதியின் முகம்'', '' கனவுகளின் வாசகன்'' இரண்டு கவிதைத்தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுகிழமை முற்பகல் 9.30 மணியளவில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ''அகதியின் முகம்'' கவிதைத் தொகுப்புக்கான வெளியீட்டுரையினை 'அம்பலம்' ஆசிரியர் தபின், ஆய்வுரையினை பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். முதற்பிரதியினை தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி டானியல் தியாகராசா பெற்றுக்கொள்வார்.

தொடர்ந்து ''கனவுகளின் வாசகன், கவிதைத் தொகுப்பின் வெளியீட்டுரையினை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் ஆசிரியர் ந.குகபரன், ஆய்வுரையினை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். அந்த 'நூலின் முதற் பிரதியினை சிறுகதை எழுத்தாளர் கந்தர் மடம் தி.மயூரன் பெற்றுக்கொள்வார்.

தொடர்ந்து வாழ்த்துரையினை புலவர் ஏ.டபிள்யூ.அரியநாயகமும் ஆசியுரையினைத் தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி டானியல் தியாகராஜாவும் நிகழ்த்துவார்கள்.

சிறப்பு நிகழ்வாக்க் கவிப்போர் நடைபெறும். (50-9-302)

## இராமாவில் நலன்புரி நிலையத்தில் முன்பள்ளிச் சிறுவர்களின் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஓக.14

கிளிநொச்சி மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கத்தின் வழி நடத்தலில் கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலைய சி, டி ஆகிய பிரிவு முன்பள்ளி சிறார்களால் உருவாக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது.

யேசுபணி அகதிகள் சபையின் அனுசரணையுடன் கரித்தாஸ் நிறுவனத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கண்காட்சியினை நிறுவனப் பணிப்பாளர்கள் ஆரம்பித்துவைத்தனர்.

நலன்புரி நிலையத்தில் கிடைத்த மீன் செதில், கோழி இறகுகள், சணல், பன்னாடை, சிற்பி, நண்டு ஓடு, பஞ்சு, நாவல்பூ மொட்டு, சிரட்டை, நிலக்கடலை, புதினத் தாள்கள், புளியங்கொட்டை, கத்தரிக்காய், மிளகாய் நெட்டிகள், முட்டைக்கோது, பால்மாபெட்டி போன்றவற்றினால் உருவாக்கப்பட்ட பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

நலன்புரி நிலையத்தினுள் காணப்பட்ட கழிவுப் பொருள்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கண்காட்சிப் பொருள்கள் மனதைக் கவரக்கூடியதாக இருந்ததாகவும் இக்கண்காட்சிக்கு ஊக்குவித்த சிறார்களின் பெற்றோர்கள், முன்பள்ளி ஆசிரியைகள் ஆகியோர் பாராட்டப்படவேண்டியவர்கள் எனக் கண்காட்சிக்குச் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சிப் பிரிவு சாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார். (50-207-160)

## சாவகச்சேரி கூ. சங்கத்தின் எரிபொருள் நிலையம் நாளை திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.14

சாவகச்சேரிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையம் நாளை சனிக்கிழமை திறந்துவைக்கப் படவுள்ளது.

சங்கத்தின் தலைவர் இ.இராஜாராம் தலைமையில் இடம்பெறும் இந்தத் திறப்பு விழாவில் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா முதன்மை விருத்தினராகக் கலந்துகொண்டு நிலையத்தைத் திறந்து வைப்பார். (50 - 224)

## கொழும்பில் இருந்து தொலைபேசிக் கம்பங்கள் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம்,ஓக.14

யாழ்.ரெலிக்கொம் நிறுவனத்திற்கு கொழும்பில் இருந்து 300இற்கும் மேற்பட்ட தொலைபேசிக் கம்பங்கள் எடுத்து வரப் பட்டுள்ளன. ஏ-9 தரைப்பாதையூடாக வாகனங்கள் மூலம் இந்தக் கம்பங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. (50-224)

## அபிவிருத்திச் சங்கங்களை புனரமைக்க நடவடிக்கை

நல்லூர்,ஓக.14

சேதமடைந்த கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர்சங்கங்கள் ஆகியவற்றின் கட்டங்களை புனரமைப்பதற்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

யுத்த அனர்த்தம் காரணமாக யாழ். மாவட்டத்தில் சேதமடைந்த கிராம அபிவிருத்தி சங்கக் கட்டடங்கள் குறித்த விவரங்களைக் கிராம அபிவிருத்தித் திணைக்களம் கோரியுள்ளது. (203-111)




## குடாநாட்டுத் தபாலகங்களில் விரைவில் பணப்பரிமாற்ற வசதிகள்

யாழ்ப்பாணம்,ஓக.14

யாழ்.பிரதம தபாலகத்தில் மின்னஞ்சல் மூலமான காசுக்கட்டளை அனுப்புதல் மற்றும் 'வெஸ்ரேன் யூனியன்' பணப்பரிமாற்ற சேவை ஆகியவற்றை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பணப்பரிமாற்ற சேவை நிலையங்களை ஒவ்வொரு பிரதேச தபாலகங்களிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதற்கு முன்னேற்பாடாகவே எட்டுத் தபாலகங்களுக்கு கணனி இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தபாலகங்களில் ஏற்படுத்தப்படவிருக்கும் இந்தப் பணப்பரிமாற்ற நிலையங்கள் மூலம் மக்களின் பணப்பரிமாற்ற சேவைகள் இலகுவாக்கப்படும் என்று தெரிவிக்கப் படுகின்றது. (50-224)

## வேதாந்தப் பேருரை

யாழ்ப்பாணம்,ஓக.14

யாழ்.குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வேதாந்தப் பேருரை இடம்பெறவுள்ளது.

'ஆன்மீகம் என்றால் என்ன?' என்ற தலைப்பில் பரமானந்த சுவாமிகள் உரையாற்றவுள்ளார். (203)

## வாராந்த ஆன்மீக நிகழ்வு

வடமராட்சி,ஓக.14

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குச் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களின் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (203-236)



வலி.தென்மேற்கு, கட்டுடை கிராமத்திற்குக் குடிதண்ணீர் விநியோகத்தைக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நீர்வழங்கல் வடிகால் அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எல்.எம்.அதாவுல்லா, சமூகசேவைகள் சமூகநலத்து[illegible]ந்தா ஆகியோர் இணைந்து ஆரம்பித்துவைப்பதனையும்-மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் [illegible]ரையாற்றுவதையும் அமைச்சர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: இரா.சுதா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் 2009/2010ஆம் ஆண்டுக்கான பதவி ஏற்பு வைபவத்தில் பிராந்தியத் தலைவர் லயன் எஸ்.ஜெயபாலன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கொமர்ஷல் வங்கியின் யாழ்.கிளை சிரேஷ்ட முகாமையாளர் லயன் எஸ்.ரவீந்திரா, கௌரவவிருந்தினராகக் கலந்துகொண்ட லயன் கே.தணிகாசலம் ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும், வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா உரை யாற்றுவதை இரண்டாவது படத்திலும் பிரதம விருந்தினர் எஸ்.ரவீந்திரா புதியதலைவர் எஸ்.சிவநாதனுக்கு கைலாகு கொடுத்து பதவியில் அமர்த்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: கர்ணன்)*

# இடம்பெயர்ந்த மக்களுக்கு இலங்கை அரசு இன்னும் நிறையவே செய்தாக வேண்டும்

## அமெரிக்க தமிழ் அமைப்புகளுடனான சந்திப்பில் அந்நாட்டு பிரமுகர்கள் கருத்து

வாஷிங்டன், ஓக.14

முகாம்களில் நெருக்கடிகளைக் குறைப்பதிலும், இடம்பெயர்ந்தவர்களை பதிவு செய்வதிலும் மனிதநேய நிறுவனங்கள் செயல்படுவதற்கான வசதிகளை விஸ்தரிப்பதிலும் இலங்கை அரசாங்கம் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது என்றாலும் இன்னும் நிறையவும் காரியங்கள் செய்யப்படவேண்டி இருக்கின்றன.

இவ்வாறு தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க ராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளர் றொபேட் பிளேக்கும் இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரக பொறுப்பதிகாரி ஜேம்ஸ் மூவரும் கருத்து வெளியீட்டுள்ளனர்.

மேற்படி இரு அமெரிக்க உயர்மட்ட பிரமுகர்களும் கடந்த 11ஆம் திகதி அமெரிக்காவிலுள்ள இலங்கை தமிழர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் 16 பேருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்கள். இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் பிரதிநிதிகளுடன் இலங்கையில் தற்போதுள்ள மனித உரிமை நிலைமைகள் மற்றும் அரசியல் இணக்கப்பாட்டுக்கான வசதிகள் தொடர்பாக அமெரிக்க பிரமுகர்கள் கலந்துரையாடினார்கள்.

இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகத்திலுள்ள இணையத்தள தொடர்பு வசதிகளைப் பயன்படுத்தி (டிஜிட்டல் வீடியோ) தூதரக பொறுப்பதிகாரி ஜேம்ஸ் மூவர் அமெரிக்க ராஜாங்க அமைச்சில் நடந்த கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

அமெரிக்காவிலுள்ள இடம்பெயர்ந்த தமிழர்களின் கவலைகள், அபிலாஷைகள் பற்றி அறிந்துகொள்ளவும் அமெரிக்க அரசாங்கம் மனிதாபிமான நெருக்கடிகளைத் தீர்த்து வைப்பதில் எடுத்துவரும் நடவடிக்கைகளை பகிர்ந்துகொள்ளவும் இந்த உரையாடல் பெரிதும் உதவியாகவிருந்ததென்று அமெரிக்க ராஜாங்க உதவிச்செயலரும் இலங்கையிலுள்ள பொறுப்பதிகாரியும் தெரிவித்தனர். 2009ஆம் ஆண்டில் அமெரிக்க ராஜாங்க அமைச்சு 56 மில்லியன் அமெரிக்க டொலர் மனிதாபிமான உதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது என்று அவர்கள் தெரிவித்த னர்.

இடம்பெயர்ந்த மக்கள் விரைவாக பாதுகாப்புடன் தங்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட வேண்டும். சர்வதேச மனிதநேய அமைப்புகள் அம்மக்களைத் தொடர்ந்து சந்திப்பதற்கு வசதி இருக்க வேண்டும். அவர்கள் பதிவு செய்யப்படுவதுடன் தேசிய அடையாள அட்டைகளும் வழங்கப்பட வேண்டும். இது அவர்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு உதவியாகவிருக்கும் என்று அமெரிக்க பிரமுகர்கள் தெரிவித்தனர்.

அரசியல் இணக்கப்பாடு ஏற்பட வேண்டியதன் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தியதுடன், அமைதியைத் தோற்றுவிப்பதற்கு நாட்டில் சமாதானத்தையும் நீதியையும் நிலைநாட்டுவதற்கு சகல கட்சிகளுக்கிடையிலும் இணக்கப்பாட்டை இலங்கை அரசு தோற்றுவிக்க வேண்டும் என்று அமெரிக்க பிரமுகர்கள் தெரிவித்தனர்.

சகல கட்சிகளுடனும், இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள தமிழர்களோடும் இலங்கை அரசு பேச்சுக்களை நடத்தி அதிகாரத்தைப் பரவலாக்கவும் மனித உரிமைகளை மேம்படுத்தவும் புதிய பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கை அரசும் அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தமிழர் அமைப்புக்களும் அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் நாட்டை மீளக் கட்டியெழுப்பவும் ஒருவரோடு ஒருவர் கலந்தாலோசிப்பதில் ஈடுபடுவது அவசியம் என்பதனை அவர்கள் வலியுறுத்தினார்கள்.

தொடர்ந்து இம்மாதிரி கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டுமென்பதை வலியுறுத்திய அவர்கள் தகவல்களை பகிர்ந்து கொள்வதையும் தொடர்ச்சியாக கடைப்பிடிக்கும்படி கலந்துகொண்டவர்களைக் கேட்டுக் கொண்டனர். (ப)


## உடனடி வெளிநாட்டு வேலை வாய்ப்பு

SAUDIARABIYA

கீழ்க்காணும் வெற்றிடங்கள் உள்ளன.

1.சுத்திகரிப்பாளர் Cleaner 2.கூலியாள்கள் Labourers
3.தச்சன் Carpenter 4.சாரதிகள் Drivers
5.மேசன் Mason 6.பைப் பொருத்துனர் Plumper

தொடர்புகளுக்கு :- SATHEES TRAVEL AGENCY
Uduvil Road,Manipay,Jaffna.
Reg. No. VSW/FIN/BR/936/1-2004
Satheesagency@gmail.com
T.P - 060 221 1958
021 4591625
077 6138942
Join with Air King (pvt) Ltd. (LIC. # 1791)
(87796)



## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 ★ 11 ★ 1917



மறைவு 18 ★ 07 ★ 1990

அமரர் வைத்திலிங்கம் சிங்கவேலு

(முன்னாள் உரிமையாளர், எரிபொருள் நிலையம், மருதனார்மடம்)

திதி: 14.08.2009

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அவரது பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நல்லூர். (87791)



## ஈராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 20 ★ 11 ★ 1920



விண்ணில் 06 ★ 08 ★ 2007

விஸ்வகுலத்திலகர் சிற்பக் கலாமாமணி

அமரர் சின்னையா செல்லத்துரை

(சிற்பாசாரியாரும் தொழில்நுட்ப வல்லுநரும்)

ஏற்றமிகு சிற்பக்கலைஞனாய்
போற்றிடும் நற்பண்பாளனாய்
கைவண்ணமதில் கலைவண்ணம் காட்டி
உளம் புகழும் பேர் புகழும் ஏற்று
உலகை நீத்து விஸ்வுலகம் ஏகி
ஈராண்டு கடந்தாலும்
மங்காப் புகழாய் - என்றும்
வாழும் உம் பெயர்.

40/2, கலைமகள் வீதி, அரியாலை. குடும்பத்தினர்.
(560297)



## பணியாளர்கள் தேவை

திருநெல்வேலியிலுள்ள நிறுவனம் ஒன்றிற்கு சமையல் வேலை தெரிந்த பெண், தோட்ட வேலையில் ஆர்வமுடைய ஆண் பணியாளர்கள் தேவை. நேரில் வரவும்.

140, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
(பெற்றோல் செற் முன்பாக),திருநெல்வேலி.
T.P.: 021 222 2478
(87871)



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 ★ 01 ★ 1938



உதிர்வு 18 ★ 07 ★ 2006

திருமதி தெய்வானை வேலாயுதம்

திதி: அபரபக்க நவமி

எம் இனிய அம்மா,
சொல்லுந் தரமன்று
உன்றன் இழப்பு
உதிரத்தை உணவாக்கினாய்
உலகத்தில் ஆளாக்கினாய்
கனவான வாழ்வுதனில்
கலையாத உணர்வானாய்
‘எல்லாமாய்’ எமக்கிருந்தாய்
சொல்லுந் தரமன்று
உன்றன் இழப்பு

‘திருத்தணிகை’,
கல்லூரி வீதி, வதிரி, கரவெட்டி. குடும்பத்தினர்.
(87873)



## ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

01.பதவி வெற்றிடம்

கீழ்க்கண்ட பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

பதவி : பொது முகாமையாளர்
பதவி கு.இல : 101/8
சம்பளத் திட்டம் : (66/2006 சுற்று நிருபப்படி) 11200 - 14100
140 X 10 - 150 X 10

02.கல்வித் தகைமைகள்:

அ.கூட்டுறவுப் பணியாளர் 09ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவம்/ 10ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ.அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன் அல்லது இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில் ஸ்தாபனம் ஒன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ.கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உ/த) சித்தி, க.பொ.த. (உ/த) 03 பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியியில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

03.வயதெல்லை: 18-45 வரை

விண்ணப்ப முடிவு திகதி: 26.08.2009

குறிப்பு:
1. வயதெல்லை கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்களது சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.
3. அனுப்ப வேண்டிய முகவரி: தலைவர், ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், வைத்தியசாலை வீதி, ஊர்காவற்றுறை.

ஊர்காவற்றுறை. (87872) பொது முகாமையாளர்.



## விற்பனைக்கு

சகல வேலைகளும் முடித்து மிகவும் நல்ல நிலையில் உள்ள 21 - XXXX இலக்க முடைய ஆட்டோ விற்பனைக்குண்டு.

(87660) தொடர்புகளுக்கு: சுரேஸ், மல்லாகம். 077 6221881



## மணமகள் தேவை

சிங்கராசி, மகம் நட்சத்திரம், 36வயது மணமகனுக்கு (ஐயர்) வெளிநாட்டு மணமகள்தேவை.

தொடர்புகளுக்கு:
[illegible]
சிவன் கோயிலடி, நல்லூர்.
தொ.பே.: 077 4911975
(87793)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தப்பெருமானுக்கு இன்று கார்த்திகைத் திருவிழா

'ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்க வேண்டும்' என்கிறார் அருணகிரிநாதர். ஓங்காரம் என்பது ஒலி என்று நினைக்கிறோம். அது ஒலி வடிவாக மட்டுமல்லாமல் ஒளிப் பிழம்பாகவும் இருக்கும் என்பது ஆன்றோர் வாக்கு. அந்த ஒளிப் பிழம்புக்குள்ளே உள்ளொளியாய் இருப்பவன் முருகன். ஓங்காரம் என்பது ஓர் அடையாளம். முருகன் தன் வாகனமாகிய மயிலை அணைத்துக் கொண்டு நிற்கும் காட்சியை அப்படியே கோடிட்டுப் பார்த்தால் அது பிரணவமாகத் தோன்றும். ஆக, பிரணவம் ஒலி, ஒளி இரண்டும் கலந்ததென்பது தத்துவம். இத்தரு பிரணவ மந்திரத்தின் உட்பொருளைத் தந்தையாம் சிவபிரானுக்கு எடுத்தோதி உணர்த்தியதால் 'தகப்பன் சாமி என்று பெயர்பெற்றவன் முருகன்.

சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிவந்த ஆறு தீப்பொறிகளே ஆறுமுகப் பெருமான் ஆனார். அக்கினிப் பிழம்பான இப்பொறிகள் சரவணப் பொய்கையில் கார்த்திகைப் பெண்களால் ஆறு குழந்தைகாக வளர்த்தெடுக்கப்பட்ட வேளையில், உமாதேவியார் ஆசையுடன் அவ் ஆறு குழந்தைகளையும் ஒரு சேரக் கட்டியணைத்ததால் ஆறு திருமுகங்களுடனும் பன்னிரு கைகளோடும் ஒருருவாய் முருகப் பெருமான் தோற்றமளித்தார். தேவரை வருத்திய அரக்கர்களை அழிக்கவென சிவபெருமானால் அவதாரம் ஆக்கப்பட்ட முருகப் பெருமானுக்கு அரக்கர்களுடனான போரில் வெற்றியீட்டுவதற்காக சக்தியான உமாதேவியார் தனது நெற்றியிலிருந்து ஒரு தீப்பொறியை எடுத்து தனது பத்து அவதாரங்களது குணாதிசயங்களையும் சாராம்சத்தையும் ஒன்று சேர்த்து வேலாயுதமாக ஆக்கி முருகனுக்கு அளித்தாள். இதனால் முருகனும் அவன் கைவேலும் எப்பொழுதும் ஒன்றாய் இயங்கி வணங்கப் பெற்றனர். அதையொட்டியே முருகன் திருத்தலங்களில் ஆதி மூலத்தில் முருகனது வேலைப் பிரதிஷ்டை செய்து வணங்கும் வழக்கம் கைக் கொள்ளப்படலாயிற்று. நல்லைத் திருப்பதியிலும் ஆதிமூலத்திலும் முருகன் கைத் திருவேலே

[10ஆம் பக்கம் பார்க்க...]

# நல்லூரில் இன்று மாலை இசை அர்ச்சனை

யாழ்ப்பாணம்,ஓக.14

நல்லூர் கந்தசுவாமி ஆல்யப் பெருந்திருவிழாவில் இன்று கார்த்திகைத் திருவிழா இடம்பெறவுள்ளது.

முருகனுக்குரிய விசேட திருவிழாக்களில் கார்த்திகைத் திருவிழாவும் ஒன்றாகும்.

இன்று விசேடமாக ஆலய உள் வீதியில் இசை அர்ச்சனை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அனைத்து வாத்தியங்களும் ஒருங்கே சங்கமிக்கும் ஒரு நிகழ்வாக இது இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 6.30 மணிக்கு ஆலய உள் வீதியில் இசை அர்ச்சனை இடம்பெறவுள்ளது.

ஒவ்வொரு இசைவாத்தியக் குழுவினரும் ஒருங்கே தமது இசை அர்ச்சனைகளை வழங்கவுள்ளனர்.

குடாநாட்டிலுள்ள கலைஞர்கள் அனைவரும் பங்குபற்றும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (203)

## பின்னையேன் நாம் இங்கிருப்போம்

பள்ளி அறை கூட்டிச் சென்று
பக்குவமாய் உறங்க வைக்க
வள்ளியைச் சுறண்டி வேலன்
வா! வெளியே போவோமென்றான்

கள்ளமாய் இருவருமந்த
கனத்த பேர் கதவைத் தள்ளி
மெள்ளவே வெளியே வந்து
மேற்கு வீதியை அடைந்தபோது

உள்ளத்தை உருக்கும் வண்ணம்
உரையாற்றினார் நித்தியானந்தசர்மா
வள்ளியும் கந்தனுமாய் வடிவாக ரசித்துவிட்டு
இங்கிதமாய் துர்க்கா மண்டபத்தை
தூர நின்று பார்த்தபோது

அவ்விரு மண்டபங்களிலும்
ஆக ஐம்பது பேரைக் கண்டார்
ஏனிந்த கொடுமை அப்பா!
எங்கெமது பக்தர் என்ன

அங்குவந்த தெய்வானையாரும்
அரியதோர் உண்மை சொன்னார்
எங்கும் நான் சுற்றிப் பார்த்தேன்
இனிய நல் யாழ்ப்பாணத்தில்
பெண்கள் பல் ஆயிரவர் தத்தம்
பெரிய பேர் மனையிலுள்ள
எண்ணரும் 'ரீவீ' முன்னே
இருந்திட நான் கண்டேன் என்றாள்
அண்ணலே ரீவீக்கு அத்தனை மகிமையானால்
பின்னையேன் நாம் இங்கிருப்போம்
பேதையே! கயிலை வா! என்றான் கந்தன்.

- விகடகவி.

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.14

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து கலாசாரத் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ''ஆறு முகமான பொருள்'' என்னும் தலைப்பில் சைவப்புலவர் கா. கமலநாதனின் சிறப்புச் சொற்பொழிவும், பண்ணிசைக் கச்சேரி மற்றும் மருதடி விநாயகர் அறநெறிப்பாடசாலை, வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (9)

* * *

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் இசையரங்கு நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகிறது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் செல்வி பரமேஸ்வரி கணேசனின் பாட்டு இடம்பெறவுள்ளது. வயலின் - கே.குகபரன், மிருதங்கம் - வி. ரமணா, கடம்- எஸ்.சிவசிவா ஆகியோர் அணிசேர் கலைஞர்களாக இணைந்துகொள்கின்றனர். (9)

* * *

நல்லூர்க்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவினை முன்னிட்டு ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா ''கம்பராமாயணம்'' தொடர் இசைச் சொற்பொழிவினை நிகழ்த்தி வருகிறார்.

இதில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் ''வாலி [illegible]'' [illegible] தலைப்பில் இசைச் சொற்பொழிவு இடம் பெறும். (9)





மயிலேறி வேல் எடுத்து மக்கள் குறைபோக்க வா முருகா!

விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

சந்தியா மல்ரி கோட் யாட்

பான்சி, கிவ்ற் பொருள்கள் ஏகவிநியோகஸ்த்தர்

இல.531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

T.P.No.: 021 222 6960


# நல்லூர் பெருந்திருவிழாக் கால உதயனின் சிறப்பம்சம்

## பார்த்திருக்க உள்ளம் பரவசமாய் இனிக்குதே!

கார்த்திகைத் திருநாளில் கழலிணை பணிந்தேத்திடக்
கண்ணுக்கு விருந்தாய் அழகிய பூச்சப்புரத்தில்
நேர்த்திமிகு காட்சிதரும் நேத்திரத்தில் உதித்தவனே!
நெக்குருகி நிற்கின்றோம் நெடுமாலின் மருகனே!
கீர்த்திமிகு நல்லூரில் வள்ளி தெய்வானை சமேதராய்ப்
பார்த்திருக்க உள்ளம் பரவசமாய் இனிக்குதே!
பூர்த்திசெய் திடுவாய் எங்கள் வேண்டுதலை எல்லாம்
பூரணனே காரணனே பொற்பதம் போற்றி போற்றி!

- சிவநெறிக் கலாநிதி இராஜையா ஸ்ரீதரன்.

## கார்த்திகைக் கந்தன் கருணை மழை பொழிவான்

கார்த்திகைக் கந்தனுக்கின்று கற்பூரத் திருவிழா
காணவந்த பக்தர்கட்கு கருணைகிட்டும் பெருவிழா
நேர்த்தி பல நிறைவேற்றி மனநிறைவு பெறும் ஒரு விழா
நெய் விளக்குக் கொண்டுநாம் ஒளியேற்றும் பெருவிழா

பக்தர்குழாம் பின்தொடர வீதிவலம் வந்திடுவான்
ஈராறுவிழி வேலன் கருணைமழை பொழிந்திடுவான்
பார்போற்றும் குமரனவன் வேண்டும்வரம் தந்திடுவான்
சீரோடுநாம் வாழ சிவன்மகனும் அருளிடுவான்.

- வேலணையூரான் தெல்லிப்பழை.

## பரிந்தெமக்கு நல்வழியைக் காட்டு முருகையா!

கார்த்திகைக் குமரோனே அருளென்றுன் கால்பிடித்தோம்
கனிந்தெம்மைக் காத்திடுவாய் குகனே!
வானவரின் துயர்துடைக்கும் பெரும்பணியை முடிப்பதற்குச்
சிவனாரின் விருப்பால் உருவானாய்

சிவனாரின் நுதல்விழியில் அக்கினியும் அஞ்சும்வண்ணம்
பொறியானாய் உருவானாய் அன்று!
கார்த்திகைக் கன்னியர்கள் அறுவருனைப் பரிந்தெடுத்துக்
கருத்துடனே வளர்த்திடநீ வளர்ந்தாய்!

காலம் கனிந்திடவே கதிர்வேலைக் கரமேந்தி
வானவரின் துயர்துடைத்தாய் விரைந்து!
வானவரின் துயர்துடைத்து வானவர்க்கு நாடளித்து
வானவர்கோன் திருமகளை ஏற்றாய்!!

இழக்கக் கூடாதனவெல்லாம் இழந்தின்று வாடுகின்றோம்!
வாடுமெமைப் பார்த்திருத்தல் அழகோ?
பார்த்திருந்த தெல்லாமினிப் போதுமையா முருகையா!'
பரிந்தெமக்கு நல்வழியைக் காட்டு!!

- வயலூர் முருகன்.

## கார்த்திகை நாதனே! காத்திட வேண்டும்

கார்த்திகை வேலனே காத்திடவேண்டும்
கருணை வள்ளலே அருள்செய்திட வேண்டும்
நேர்த்திகள் உனக்கு ஆயிரம் வைத்தோம்
நிரந்தர தீர்வினைத் தந்திட வேண்டும்
ஏத்தியே நாளுமுனை முறையிட்டு கேட்கிறோம்
எங்களின் கோரிக்கை ஏற்றிட வேண்டும்
போற்றியே உன்னிடம் விண்ணப்பம் செய்தோம்
புதியதோர் தீர்வது தமிழர்க்கு வேண்டும்.

- மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்.

## வாராயோ நல்லைக்குமரா

நெற்றியிலுதித்து அன்னை சக்தியின்
நெடுவேல் பெற்றுத் தேவரைக் காத்தவா!
வெற்றியில் பெற்ற தெய்வயானையுடன்
விரும்பியென்றும் நல்லூரிலே உறைபவனே!
பற்றினால் குழறி பாசநீர் சொரியும்
பக்தரைக் காக்க நீ ஓடிவா!
சுற்றியே பகைவிரட்டும் சுந்தரவேலுடன்
சுவாமிநாதனே எம்துயர் போக்கவா!

காற்றினிலும் கடும் மழையினிலும்
கொடும் பகையினிலும் சிக்கிவிட்ட மாந்தர்களை
தேற்றவொரு வகையுமின்றி வாடியே
தேவாவுன் திருக்கழலைச் சரண்புகவே
சற்றும் இளகாதிருப்பதுவும் ஏன் தானோ?
சண்முகனே நாடு மகிழ்ந்திட
வெற்றிக்கொடியுடனே வீரவேலெடுத்து
வினைதீர்க்க வாராயோ நல்லைக்குமரா.

கிருபா, வியாபாரிமூலை.

## நல்லையில் அல்லலில் இல்லல்

வில்லில் சொல்லில் கல்லில்
அல்லிலும் எல்லிலும் இல்லில் அறல்
எல்லையில் ஏல்லில் அறலல்
நல்லையில் அல்லலில் இல்லல்.

டாக்டர் சி.யமுனானந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு

உங்கள் அபிமான பத்திரிகை

VIRAKESARI வீரகேசரி THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA

இந்திய கலாசார நிலையத்தின் அனுசரணையுடன்

வழங்கும்



R. ஸ்ரீ கணேஷ் வித்யா ஸ்ரீநிவாசன் G.S. ராஜன்

# பாட்டும் பரதமும்



பரதரத்னா

ஸ்ரீமதி ரமா வைத்தியநாதன்

குழுவினருடன் வழங்கும்

நாட்டிய இசை நிகழ்ச்சி

திகதி: இன்று (14.08.2009)

நேரம்: மாலை 6.00 மணி

இடம்: நல்லூர் - சாதனா தமிழ் கலவன் பாடசாலை விளையாட்டரங்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

SriLankan Airlines DECCAN AVIATION

(சி/560036)


## நீங்கா நினைவலைகள்

தோற்றம் 05 . 05 . 1930 மறைவு 29 . 07 . 2005

4ஆம் ஆண்டு



2ஆம் ஆண்டு



தோற்றம் 16 . 07 . 1935 மறைவு 23 . 07 . 2007

அமரர் சின்னையா வயிரமுத்து    திருமதி வயிரமுத்து தங்கம்மா

நவமி ← திதி → நவமி

அன்பின் சிகரங்களே! பாசத்தின் உறைவிடங்களே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஆறாது எம் மனம்.

த.மு.: அப்பையா வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
நி.மு.: மாவிட்டபுரம்.

(87795)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

### திருமதி சி.திருஞானசுந்தரம் (சின்னமணி)

மண்ணில்: 22.02.1942    விண்ணில்: 16.07.2009



எங்கள் இல்லத்தின் ஒளி விளக்காய் நின்று ஒளி தந்த
அன்புக்கும் அமைதிக்கும் உறைவிடமான அன்னையே!
பாசத்தின் வடிவமதாய் பார்த்திருந்த தாயே!

நம்நேசம் விட்டுப் போய்விடுமா?
நீங்கள் பெற்ற ஐவரும் இங்கு கண்ணீரில்
நீங்களோ விண்ணில் சுதந்திரமாய் உலா வருகின்றீர்கள்
எங்கள் உயிரும், உணர்வும் இருக்கும்
வரையில் எம்முடன் வாழ்வீர்கள்.


அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (15.08.2009) சனிக்கிழமை காலை 6 மணிக்கு தென்புலோலி பெரியதெய்வம் ஆலய அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து இல்லத்தில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரண நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


குடும்பத்தினர்.

சோழகிணற்றடி, புலோலி கிழக்கு, புலோலி.
தொலைபேசி இல.: 060 2219306.

(சி/560270)

## ஓராண்டு நினைவில்





திருமதி
### முருகன் பூரணம்

மலர்வு: 05.07.1932
உதிர்வு: 24.07.2008

### முருகன் மகாலிங்கம்

முன்னாள் லிகிதர் (கிளாக்)
கிளிநொச்சி M.O.H.

மலர்வு: 03.10.1951    உதிர்வு: 28.08.2008

திதி: 14.08.2009

எங்கள் பிறப்பின் உயிரோவியமாய்
எம்மை ஆளாக்கிய அன்புத் தெய்வமே!
உம்மால் உருவாகி எங்கள்
வாழ்விற்கு வழிகாட்டியான சோதரனே!
நாம் வாழுகின்ற காலமெலாம்
உங்கள் நினைவுகளால் என்றும் நாமிங்கு.

அறிவொளி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

(87706)

என்றும் உங்கள்
குடும்ப உறவுகள்.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### நட்சத்திரம் விமலா

(வாத்தகத் திணைக்கள உத்தியோகத்தர்)

தோற்றம்
27✱05✱1959

மறைவு
01.08.2002

ஆண்டுகள் ஏழு சென்றதுவே
கணவன், பிள்ளைகள் துயரம் ஆறுதல்
அடையுதே இல்லை
உடன் கூடிப் பிறந்த தம்பிமார், தங்கைமார்
தடுமாறிக் கலங்குகின்றார்கள்
உன்னை நாம் வாழும் காலம்வரை
நினைத்திருப்போம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(87852)

கணவர், பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
### சிவயோகம் சிதம்பரநாதன்

தோற்றம்
25★08 ★1945

மறைவு
16★07 ★2009

16.07.2009 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (15.08.2009) சனிக்கிழமை மு.ப.10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புங்கடி, புலோலி தெற்கு, புலோலி.    (சி/560279)    குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) இரத்தினபுரி. 4) மாத்தறை.

19. பின்வரும் இலச்சினைகளிடையே தெற்காசிய நாடுகளின் அமைப்பின் (சார்க் நாடுகள்) இலச்சினை எது?
1) SAARC 2) 3) 4) unicef

20. புத்தக அலுமாரியிலுள்ள புத்தகங்களிடையே மறைந்து வாழ்ந்து, புத்தகங்களைச் சேதப்படுத்தும் பிராணி எது?
1) கறையான். 2) இராமபாணம்.
3) கரப்பான். 4) அரிக்கும் புழு.

21. நோயாளிகளுக்கு எந்தவித பக்க விளைவையும் ஏற்படுத்தாது, நோயைக்குணமாக்கும் மருந்து வகை எது?
1) சுதேச மருந்து வகை. 2) வலி நிவாரணிகள்.
3) பரசிட்டமோல் வகை. 4) ஆங்கில மருந்து வகை.

22. புத்த பெருமானின் பிறப்பும், பரி நிர்வாணமும் அடைந்த தினம் எது?
1) உந்துவ பௌர்ணமி. 2) எசல பௌர்ணமி.
3) வெசாக் பௌர்ணமி. 4) துருது பௌர்ணமி.

23. போதிய அளவு கல்சியத்தைப் பெற்றுக்கொள்ள உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டிய உணவுவகை எது?
1) இறைச்சி. 2) பழவகை. 3) நெத்தலி. 4) சோயா.

24. கிராமப்புற மக்கள் பலாச்சுளையை நீண்டகாலம் பேணி பாதுகாக்கும் வழிமுறை எது?
1) உப்பிடல் முறை. 2) உலர்த்தல் முறை.
3) பொரித்தல். 4) புகையூட்டல்.

25. இலங்கையின் தேசியத்தை வெளிப்படுத்தும் அம்சம் அல்லாதது எது?
1) நிறைகலசம். 2) நாகமரம்.
3) காட்டுக்கோழி. 4) எல்லே.

26. நீண்ட நாளைய குப்பைக் கிடங்கை கிளறியபோது, நீண்டகாலமாக பிரிகையடையாது காணப்பட்ட பொருள்,
1) கற்துண்டுகள். 2) என்புகள்.
3) பொலித்தீன். 4) இரும்புக்கம்பி.

27. இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சியாகிய பம்பரகந்த காணப்படும் மாவட்டம் எது?
1) இரத்தினபுரி. 2) மாத்தறை.
3) மாத்தளை. 4) நுவரெலியா.

28. முட்டையிட்டு இனம்பெருக்கும் பிராணி எது?
1) வௌவால். 2) திமிங்கலம்.
3) இராமபாணம். 4) தேனீ.

29. மங்கையர் எல்லோரும் வாருங்கடி நல்ல மாணிக்க கங்கை ............ எனும் பாடல் எதனுடன் தொடர்புடையது?
1) அரிவி வெட்டல். 2) சூடுமிதித்தல்.
3) கும்மி. 4) தொழிற்பாடல்.

30. அழுகிய முட்டையை நீரினுள் இடும்போது என்ன நிகழும்?
1) நீரின் அடியினுள் காணப்படும். 2) நீரினுள் அமிழ்ந்து மிதக்கும்.
3) நீரின் மேலே மிதக்கும்.
4) நீரினுள் எந்த மாற்றத்தையும் காட்டாது.

31. சில உபகரணங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைப்பயன்படுத்தி விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| மின் உற்பத்தி | மட்டப்பலகை | மூலைமட்டம் | மின்பாரம் தூக்கி, |
| கரப்பு | பெரிய வாயன் | கூரைவலை | நீர்மட்டம். |


1) கட்டடமொன்றின் மேல் மாடிக்கு செல்ல உதவும் உபகரணம்
..........................................
2) விவசாயிகள் வயலை மட்டப்படுத்த உதவும் உபகரணம்
..........................................
3) கிராமப்புறங்களில் ஆழமற்ற நீர்நிலைகளில் மீன்பிடித்தல்
..........................................
4) சூடடிக்கும் இடத்தில் சாக்கை அழைக்கும் விதம்
..........................................

32. 15m நீளமுள்ள கம்பியிலிருந்து ஒவ்வொன்றும் 10cm நீளமுள்ள 25 துண்டுகள் வெட்டப்பட்டன. கம்பியின் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் எவ்வளவு?
..........................................

33. சில நகரங்களுக்கு இடையேயுள்ள தூரம் பின்வரும் உருவில் தரப்பட்டுள்ளது. கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவு, திருமலை, மட்டக்களப்புக்குள்ள தூரம் எவ்வளவு? ..........................


| | | | மட்டக்களப்பு |
|---|---|---|---|
| திருமலை | | | 63 |
| முல்லைத்தீவு | | 165 | 228 |
| கிளிநொச்சி | 85 | 250 | |

34. ஒருவர் A என்ற இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து, C, D, E, F, G, H ஊடாக, மீண்டும் Aயை வந்தடைந்தார் எனில், அவர் பயணம் செய்த மொத்த தூரம் எவ்வளவு?
..........................................





35. வாகன தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உந்துருளி பேருந்து என்பவற்றை கணக்கிட்டபோது 30 வாகனங்கள் இருந்தன. சக்கரங்களை எண்ணியபோது 70 இருந்தன. எனில், பேருந்து எத்தனை? உந்துருளி எத்தனை?
..........................................

36. அருகில் தரப்பட்டுள்ள கனக்குற்றியிலிருந்து 1m x 1m x 1m அளவான எத்தனை சதுரமுகிகளை வெட்டி எடுக்கலாம்?
..........................................




37. கொழும்பு நகரிலிருந்து அதிகாலை 4.30 மணிக்கு புறப்பட்ட பேருந்து 4 மணித்தியாலங்கள் 45 நிமிடங்களின் பின்னர் மன்னாரை சென்றடைந்தது எனில்,பேருந்து மன்னாரை சென்றடைந்த நேரத்தை நியம நேரமாக எழுதுக. ........................

38. 2cm இடைவெளியில் ஆணி அறையப்பட்டுள்ள கேத்திர கணிதப்பலகையில் ஆணியைச்சுற்றி இறப்பர் நாடாவை இட்டு உரு தயாரிக்கப்பட்டுள்ளது. உருவின் பரப்பளவு எவ்வளவு?



39. தாயினதும், மகளினதும் மொத்த நிறை 75kg, 750g ஆகும். தாயின் நிறை, மகளின் நிறையின் நான்கு மடங்கு ஆகும் எனில், மகளின் நிறை எவ்வளவு?
..............................

40. நிசாரும், சரத்தும் விளையாடச் சென்றனர். அப்போது மரத்திலிருந்து குளவிக் கூட்டிற்கு நிசார் கல்லால் எறிய...... (இது ஒரு நிகழ்ச்சியின் தொடக்கமாகும். இதன் பின்னர் நடைபெறுவதாக நீர் கருதும் விடயங்களை எழுதவும்) உமது கருத்தை ஆறு வாக்கியங்களுக்கு மட்டுப்படுத்தவும். ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களேனும் இருக்க வேண்டும். வாக்கியங்களில் இலக்கண ரீதியான தொடர்பு திருத்தமாக இருக்கவேண்டும்.

1) ..........................................................
2) ..........................................................
3) ..........................................................
4) ..........................................................
5) ..........................................................
6) ..........................................................

-நிறைவுற்றது-

## கடந்த 13.08.2009 உதயன் நாளிதழில் வெளியான விசேட புலமைப்பரிசில் பரீட்சை வெளியீடு 03 இன் விடைகள்

### வினாத்தாள்-I

01 - 4, 02 - 2, 03 - 3, 04 - 3, 05 - 1, 06 - 3, 07 - 1, 08- 3, 09 - தமிழ், சிங்கள புதுவருடம், 10 - சிட்டுப்போல, 11 - மாயஜாலம், 12 - கத்தி, 13 - 3, 14 - 1, 15 - 2, 16 - 3, 17 - 1 ,18 - 1 19 - 2, 20 - 2, 21 - 1, 22 - 3, 23 - 2 சமமான உரு 1 - 2,3 2 - 1, 4, 24 - 1, 25 - 1, 26 - 2, 27 - 1, 28 - 2, 29 - 4, 30 - 300M, 31 - வடமேற்கு/வாயு மூலை, 32 - 600m33 - 4, 34 - 1, 35 - கயல்விழி, 36 - ரோஜா, 37 - கயல்விழி, ரோஜா, துவாரக்கா, 38 - நரேன், 39 - மிர்ஸான், 40 - சமீம்.

### வினாத்தாள்-II

01. 01 - பல பக்கமும், 02 - பெரிய, 03 - காடு, 04 - அவள் கால் போன போக்கில் நடக்கிறாள், 05 - அணைத்து, ஆரத்தழுவி, 06 - வகுப்பாசிரியர், 07 - பின்னே, 08 - விழி, நேத்திரம், நயனம், 09 - கண்ணும் கருத்துமாய், ஆற அமர, 10 - வகுப்பாசிரியர்.
02. 1 - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், 2 - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.
03. 1 - குப்பையில் கிடந்தாலும் குண்டுமணி மங்காது, 2 - இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
04. 1 - உள்ளம் கசியும் பசுவைப்போல, 2 - பாலைப்போல நிலவு.
05. மழை பெய்யும் காலங்களில் ஆற்றில் வெள்ளம் பெருகி ஓடும்.
06. 1 - நான் பாட்டி, 2 - அடுப்பு, 3 - இவர் எனது மாமி.
07. 1 - குருத்துமா பந்தியே இன்னவா, 2 - மிரிஸ் பல
08. 1 - வாகனங்கள், 2 - மின்னல், 3 - நான் நாளை வருவேன்.
09. 1 - Happy Birth Day, 2 - Get Ready
10. 01 - 4, 02 - 3 03 - 3, 04 - 1, 05 - 1, 06 - 3, 07 - 2, 08 - 3, 09 - 2, 10 - 3, 11- 4, 12 - 1, 13 - 2, 14 - 3, 15 - 2, 16 - 4, 17 - 3, 18 - 4
11. 1 - சனி, 2 - வெள்ளி, 3 - மைக்கல் அஞ்சலோ, 4 - சிவப்பு.
12. 1 - பருந்து, 2 - கழுகு, 3 - நாரை.
13. 1 - செண்பகம், 2 - இராப்பாடும் குருவி, 3 - குயில்.
14. 01 - 9643, 02 - 72 , 03 - 31, 04 - பி.ப 8.40 மணி, 05 - 18l 400ml, 06 - 4 கட்டம் நிழற்றப்பட வேண்டும், 07 - 20, 08 - 0.59, 09 - 36cm, 10 - 6 கட்டத்தை நிழற்றுக.
15. 1 - ரூபா 188, 2 - ரூபா 31.25, 3 - ரூபா 252.50, 4 - ரூபா 20.00

மாணவர்களே! இவ் விடைக்குறிப்புகள் தொடர்பான தெளிவின்மைகளை நிவர்த்தி செய்ய எமது கல்விச்சுடர் ஆசிரியர் **யு.எல்.எம்.சாஜித்**, *அம்பாறை*. தொ.இ- 0779597407 அவர்களை தொடர்புகொண்டு விளக்கங்களைப் பெறமுடியும்.

## கல்விச்சாலைகளில் நிகழ்ந்தவை...





மக்கள் வங்கி சுன்னாகம் கிளையின் சிசு உதான அலகு திறப்பு விழா அச்செழு சைவ பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

திறப்பு விழாவில் விருந்தினர்கள் பாடசாலை சமூகத்தவரால் வரவேற்கப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் அலகை நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் ச.வேலழகன், மக்கள் வங்கி உதவிப் பிராந் திய முகாமையாளர் சு.ஹென்ரி, மக்கள் வங்கி பிரதி முகாமையாளர் சு.இராசமனோகரன், வங்கி உத்தியோகத்தர் க.ஜெயகணேசன் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தப் பெருமானுக்கு...

[07ஆம் பக்கத் தொடர்ச்சி....]

பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள தென்பது சிறப்பம்சமாகும்.

சரவணப் பொய்கையில் கார்த்திகைப் பெண்கள் எனும் கிருத்திகா தேவதைகளால் பாலூட்டி வளர்க்கப்பட்டதால் முருகனுக்குக் கார்த்திகேயன் என்ற திருநாமம் வழங்கலாயிற்று. முருகனை வளர்த்தெடுத்த கார்த்திகைப் பெண்கள் பின்னர் வானத்தில் நட்சத்திர வடிவமாக மாறினார்கள். ஆறு நட்சத்திரங்கள் வட்டமாகத் தோன்றுவதுடன் அதுவே கிருத்திகை நட்சத்திர மண்டலம் என வழங்கப்படுகிறது.

மாங்கனியைப் பெறுவதற்காக ஏற்பட்ட போட்டியின் போது மந்திர சக்தியை மயிலாகக் கொண்டு முருகன் உலகை வலம் வந்தான். எனவே அம் மயில் கூட மந்திர மயில் எனக் காரணப்பெயரால் அழைக்கப் படலாயிற்று. சூரபத்மனுடன் போரிட்ட போது இந்திரன் மயில் வடிவம் கொண்டு தாக்கியதால் அது 'இந்திரமயில்' எனவும், சூரபத்மனை வென்று அவனை மயிலாக்கித் தனது வாகனமாக முருகப் பெருமான் ஆக்கிக் கொண்டமையால் அது 'சூரம யில்' எனவும் காரணப் பெயர்களால் அழைக்கப்படலாயிற்று.

முருகன் காவல் தெய்வம் என்பதால் அவனது சினத்தை ஆற்றுப்படுத்தும் விதமாகவே திருமுருகாற்றுப்படை எழுதப்பட்டதென்பர்.

முருகனின் ஆறுமுருகங்களும், ஆறு பருவ காலங்களையும், பன்னிரு கரங்களும் பன்னிரு மாதங்களையும் குறிப்பதாக பண்டைத் தமிழ் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'கொக்கரக்கோ' என்ற சேவலின் குரல், கொக்கு [ ஆணவம் - அசுரர் ], அறு [ வீழ்த்திய ], கோ [ அரசன் ] - ஆணவ அசுரர்களை அழித்த அரசனே என முருகனைப் புகழும் வார்த்தை எனக் கூறப்படுகிறது.

இருள் நீங்கி ஒளி வருவதைக் கண்டால் சேவல் கூவிக் குரலெழுப்பும். அஞ்ஞான இருளை நீக்கி மெஞ்ஞான ஒளியைத் தரவல்லவன் முருகப் பெருமானே என்பதைக் குறிக்கும் விதத்திலேயே முருகனின் கொடியில் சேவல் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

முருகு என்றால் அழகு எனப் பொருள்படும். முருகன் அழகுத் தெய்வமாக, ஆனந்த மயமானவனாக புராண இதிகாசங்களில் போற்றப்படுகிறான். தன்னை நம்பி வழிபடும் பக்தர்களின் குறைகளைத் தீர்த்து அவர்களைக் காத்தருளும் தெய்வமாக முருகன் இதிகாசங்களில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளான். தன்னை நாடிவரும் அடியவர்களது வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து, அவர்களுக்கு இரங்கி அவர்தம் குறைகளைப் போக்கி நல்வாழ்வளிக்கும் தெய்வமாகப் போற்றப்படும் முருகனுக்கு முருக பக்தர்கள் பக்தி மேலீட்டால் பற்பல நாமங்களைச் சூட்டி அவன் புகழ்பாடி அவனது அனுக்கிரகம் பெற்று மகிழ்ந்துள்ளமைக்கு வரலாற்றுச் சான்றுகள் பலவுள.

கந்தன், பாலசுப்பிரமணியன், கார்த்திகேயன், கடம்பன், மால்மருகன், சிங்காரவேலவன், வேலாயுதன், வள்ளி மணாளன், சுவாமிநாதன் என்றவாறு பற்பல காரணப் பெயர்கள் கொண்டு முருக பக்தர்கள் முருகனைத் தொழுதேற்றி அவனருள் பெறுகின்றனர். அந்த வகையில் ஈழத்தில் அமைந்துள்ள புகழ் பூத்த முருக வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றாகக் கொள்ளப்படும் நல்லையம்பதியில் கோயில் கொண்டெழுந்தருளித் தன்னை நாடிவரும் அடியார்களின் துயர்களை நீக்கியருளி அவர்களுக்கு நல்வாழ்வருளும் நல்லூர் அலங்காரக் கந்தனுக்கு, தனது பக்தர்களது தொல்லையிரும் பிறவிச் சூளும் தலைநீக்கி அவர்தம் அல்லலறுத்து ஆனந்தம் அளிக்கும் நல்லைக் கந்தனுக்கு இன்று கார்த்திகை உற்சவம்.

இன்றைய புண்ணிய நன்னாளில், தேவியர் இருவருடன் வீதிவலம் வந்து, தன்னை நாடிவந்து தரிசிக்கும் பேறுபெற்ற அடியவர்களுக்கு மட்டுமல்லாது தன்னை மனதில் இருத்தி ஒருகணம் மனக் கண்ணால் கண்டு துதிக்கும் பக்தர்களுக்கும் அருள்பாலிக்கும் நல்லைக் கந்தனின் கார்த்திகை உற்சவம் கண்டு, அவன் பாதம் பணிந்து, அவன் புகழ்பாடி, மனத்தால்- வாக்கால்- காயத்தால் நல்லூர்க் கந்தனை ஏற்றிப் போற்றித் துதித்து அவளருள்பெற்று உய்வோமாக. ★

-சதரா-

# வாசகர் திருமுகம்

## இம்மாதிரி அடாவடித்தனங்களுக்கு கடுமையான தண்டனை வேண்டும்

இன்று நாட்டில் குறிப்பிட்ட சிலர் இரவு, பகல் வேளைகளில் அடாவடித்தமான செயல்களில் ஈடுபடுகின்றனர். இவர்களின் செயல்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் கடுமையான தண்டனைகளை வழங்க வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு சட்டத்தரணிகளும் வழக்குகளில் ஏற்படக்கூடாது. இப்படி நடந்தால்த்தான் யாழ்.மாவட்ட மக்கள் நிம்மதியாக வாழமுடியும். குறிப்பாக கொக்குவில் மேற்கில் நள்ளிரவு அத்துமீறி உட்புகுந்து கணவன், மனைவி, பிள்ளைகள் மூவரையும் வெட்டியும் கத்தியால் குத் தியும், பொல்லுகளால் அடித்தும் கொலை செய்ய எத்தனித்து கொள்ளைக்கு வந்துள் ளார்கள். எவ்வளவு நெஞ்சழுத்தம் இவர்களைத் தண்டிக்க ஆட்கள் இல்லை என்றதைரியம். மறுநாள் நாச்சிமார் கோயிலுக்கு பக்கத்தில் கணவனை வெட்டிக் காயப்படுத்தி மனை வியின் கழுத்தை திருகி பயமுறுத்தி கொள்ளையடித்துள்ளார்கள். இவர்களுக்கு அரபு நாட்டுச் சட்டம் தான் மிக மிகப் பொருத்தமாக இருக்கும். மயக்க மருந்து இவர்களுக்கு எப்படிக் கிடைக்கின்றது?

இதனை சம்பந்தப்பட்டவர்கள் சாதகமாகப் பரிசீலிக்கவும் சமூக விரோதிகளுக்கு சட்டம் இரக்கம் காட்டக் கூடாது என்பதனையும் இரவு வேளைகளில் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளைக்கு வருபவர்களைக் கொலை செய்தாலும் குற்றம் இல்லை என்று சட்டம் கொண்டு வரக்கூடாதா என்று எண்ணும் அளவுக்கு நிலைமை அட்டூழிய நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றது.

யாழ்.மாவட்ட மக்கள்
சார்பாக சச்சி.
கொக்குவில்.

## இவற்றையும் சீர் செய்க

உதயன் பத்திரிகையில் 23.07.2009 அன்று வெளியான தபால் பெட்டிக்கு பொதுமக்கள் செல்ல முடியவில்லை என்ற செய்தி தொடர்பாக, அந்த இடம் துரித கெதியில் துப்புரவு செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. மத்திய சந்தையில் பழுதடைந்த அன்னாசிப்பழம் விற்பனை செய்த பொழுது அதைத் தடுத்து அவற்றை அழித்தொழித்தமை போன்ற செயல்களுக்கு மக்களின் மனமுவர்ந்த பாராட்டுக்கள்.

இதேவேளை மேற்படி சந்தையில் விற்கப்படும் பழவகைகள் (வாழைப்பழம், மாம்பழம், பாலாப்பழம்) மருந்து அடித்துப் பழுக்க வைத்து விற்பனை செய்வது வெளிப்படை. இது இந்த நல்லோர் கண்களுக்கும் காதுகளுக்கும் எட்டாது இருப்பது வியப்புக்குரியது.


மேலும் பழைய சந்தையின் மேல்மாடிக் கட்டடங்கள் திறந்த மலசல கூடமாக காட்சியளிக்கிறது. இது (மனித) எரு சேகரிக்கும் களஞ்சியமோ தெரியவில்லை. அத்துடன் அங்குள்ள மலசல கூடத்திற்கு பக்கமாக செல்வோர் மூக்கைப் பிடித்தபடி செல்கிறார்கள். ''அந்த மாதிரியான வாசனை'' அங்கே மிக உயரமான நல்ல நிலையில் ஓர் நீர்த்தாங்கியும் உள்ளது. தண்ணீர்..........? இவற்றையும் சீர் செய்தால் மக்களின் மனங்களில் வசந்தம் வீசும். பொறுப்பானவர்களுக்கும் புகழ் மாலைகள் கிடைக்கும்.

-கோகிலன்.
நெல்லியடி..

## தினம் தினம் தொலையும் தே.அ.அட்டை

நாளாந்தம் பத்திரிகையில் இரண்டுக்கு மேற்பட்டோர் தமது தேசிய அடையாள அட்டைகளைத் தொலைத்து விட்டுத் தேடுவது மனிதப் பண்புடையோரை மனம் நெருட வைக்கிறது. அதிலும் இளம் பிள்ளைகள் இதன் இழப்பால் ஏற்படும் அவஸ்தைகளை இதனை எடுத்தவர்கள் எண்ணிப்பார்க்காதது வேதனையைத் தருகிறது. குறிப்பாகப் பணத்துடன் இழந்தோர் நிலைபாடு படுபரிதாபம். அதில் தெளிவாக பெயர், விலாசம், தொழில், வயது உண்டு. ஆசிரியத் தொழிலாளர்களையும் எவரும் மதித்ததாக இல்லை. சொந்தப் பணத்தில் ரூபா 5/= முத்திரை பெரிதல்ல ஆனாலும் எடுத்த பணத்தில் ரூபா 5/= ஐ செலவழித்து உரியவர்க்கு அனுப்பி வைத்தால் கோடி புண்ணியம் அல்லவா? தவறவிடுவது எவர்க்கும் சாத்தியமே. அதனை எடுத்த புண்ணியர்கள் வருங்காலத்தில் அருகிலுள்ள தபாற் பெட்டியிலாவது போட்டு உதவுக. உங்களை எவரும் திருடனென்று பிடிக்க மாட்டார்கள். இது எமது தேசியப் பண்புகளில் ஒன்றாக மிளிரட்டும். இன்றே செய்க. நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ உதவுவோமாக.

பாதி[illegible]
உரும்பிராய்.



காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் சுவாமி தேரில் எழுந்தருளி வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம். (250)



நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலய கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. பூரண கும்பங்கள் வீதியுலா வருவதையும் மூலஸ்தான தூபிக்கு அபிஷேகம் இடம் பெறுவதையும் காணலாம்.



உரும்பிராய் காமாட்சி அம்மன் ஆலய தேர்த்திருவிழா கடந்த 4 ஆம் திகதி இடம் பெற்றது.



நீர்வேலி வடக்கு ஞானவைரவர் ஆலயத்தில் கவிமணி அன்னதாசன் தொடரிசைச் சொற்பொழிவு நிகழ்த்தியபோது எடுக்கப்பட்ட படம். மிருதங்க கலைமாணி ம.வினோகாந், ஆர்மோனியச் சக்கரவர்த்தி யோண் கபாஸ் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கைத்தொலைபேசிப் பாவனை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரிக்கத் தீர்மானம்

கொழும்பு, ஓக. 14

மாணவர்கள் பாடசாலைகளில் வைத்து கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவது சம்பந்தப்பட்ட பிரச்சினையை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரிக்கத் தீர்மானித்துள்ளது.

கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாடசாலைகளில் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தக் கூடாது எனத் தடையுத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகள் கையடக்கத் தொலைபேசிகள் பாவனை குறித்த சம்பவங்களின் பின்னணியில் தற்கொலை முயற்சியில் அண்மையில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் மறுநாள் இறந்துவிட்டார். இதையடுத்து, கல்வியமைச்சுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் காரசாரமான விமர்சனங்களை முன்வைத்தன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாடசாலைகளில் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தக் கூடாதென உடனடியாகத் தடையுத்தரவு பிறப்பித்தார்.

கல்வியமைச்சு இது தொடர்பாக சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டு சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைத்தது. அதில் கையடக்கத் தொலைபேசிகளைப் பாடசாலைகளுக்கு எடுத்து வருவதும், பாடசாலைகளில் பயன்படுத்துவதும் தண்டனைக்குரிய குற்றமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாடசாலையில் வைத்து கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தினார் என்பதற்காக மாணவி ஒருவரின் கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவி பாடசாலையிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டுள்ளார். கண்டியில் கட்டுகஸ்தோட்டையிலுள்ள புனித அந்தோனியார் மகளிர் பாடசாலையைச் சேர்ந்த மாணவி ஒருவரே இவ்வாறு பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டார்.

ஆனால், இம்மாணவியின் பெற்றோர் கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தினார் என்ற குற்றத்துக்காக தங்கள் மகள் பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளமையை ஆட்சேபித்து கண்டியிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு மேற்கொண்டுள்ளனர்.

கண்டியிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் விரஞ்ஜித் சமரசேகர இம் முறைப்பாட்டை பரிசீலித்தார். அவர் அதன் பின் இம் முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்துவதற்குத் தீர்மானித்தார்.

இதையடுத்து, கையடக்கத் தொலைபேசியைப் பாடசாலையில் பயன்படுத்திய மாணவி பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக விளக்கமளிக்க குறித்த பாடசாலையின் அதிபர், கட்டுகஸ்தோட்டை வலயக் கல்விப் பணிப்பாளர், மத்திய மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆகியோர் எதிர்வரும் 25·ஆம் திகதி ஆணைக்குழு முன் ஆஜராக வேண்டுமென்று ஆணைக்குழு அழைப்பாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

(சி)

## அலுமினியம் பொருத்தும் பயிற்சி

நல்லூர்,ஓக.14

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்களம் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் நல்லூர் சங்கிலியன் சன சமூக நிலைய மன்றக் கட்டடத்தில் மாணவர்களுக்கான அலுமினியம் பொருத்துகைப் பயிற்சிநெறியை ஆரம்பித்துள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் 30 இளைஞர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஆறு மாதங்களுக்கு இந்தப் பயிற்சி இடம்பெறவுள்ளது.

பயிற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாகவும் பயிற்சியின் முடிவில் சான்றிதழுடன் தொழில் தொடர்பான உபகரணங்களும் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.ஜெயராசா தெரிவித்துள்ளார்.

(203-111)

## நாடகக் களப்பயிற்சி செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.14

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் அழகியற்பாடம் கற்கும் தரம் 9 தொடக்கம் 11 வரையான மாணவர்களின் உடல் உள ஆற்றலை மேம்படுத்தும் வகையில் நாடகக் களப்பயிற்சிச் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இச்செயலமர்வு இடம்பெறவுள்ளது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி நாடகமும் அரங்கியலும் விரிவுரையாளர் கு.திலகநாதன் தலைமையில் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

மாணவர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ தெரிவித்துள்ளார்.

(203)

## அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு ஜனாதிபதி திட்டமாம்

### லலித் வீரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 14

இலங்கையில் தற்போது காணப்படும் பாரியளவு அமைச்சர் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி ஆராய்ந்து வருகிறார் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

குருணாகல் மாவட்டத்தில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி விரைவில் மேற்கொள்வார் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அமைச்சர்களின் எண்ணிக்கை மிகவும் உயர்வாகக் காணப்படுகிறது என ஜனாதிபதி கருதுகிறார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை 128 என்பது குறிப்பிடத்தக்கது.

## மடுத் திருவிழாவை முன்னிட்டு விசேட ரயில், பஸ் சேவைகள்

கொழும்பு, ஓக. 14

புனித மடு தேவாயலயத்தின் வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளன. எதிர்வரும் 16ஆம் திகதி வரை விசேட ரயில் மற்றும் பஸ் சேவைகள் நடைபெறும் என இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

இதன் பிரகாரம் மாத்தறை, புறக்கோட்டை, மொறட்டுவ மற்றும் நீர்கொழும்பு ஆகிய ரயில் நிலையங்க்ளில் இருந்து மதவாச்சி வரை விசேட ரயில் சேவைகள் இடம்பெறும். மதவாச்சியில் இருந்து மடுவரை விசேட இ.போ.ச. பஸ் சேவைகளும் நடத்தப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

அதேவேளை, மதவாச்சியில் இருந்து புறக்கோட்டை, நீர்கொழும்பு, மாத்தறை ஆகிய இடங்களுக்கும் விசேட ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. நீர்கொழும்பில் இருந்து காலை 7.45 மணிக்கு விசேட ரயில் சேவையொன்று இடம்பெறவுள்ளது. இந்தச் சேவை நேற்று ஆரம்பமானது. அத்துடன் இச்சேவை நாளையும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. இந்த ரயில் பகல் 1.43 மணிக்கு மதவாச்சியைச் சென்றடையும்.

இவை தவிர தினமும் புறக்கோட்டையில் இருந்து வவுனியா வரை இரவு 10 மணிக்கு இரவு நேர தபால் ரயில் சேவை இடம்பெறும். இந்த ரயில் மறுநாள் காலை 4.29 மணிக்கு மதவாச்சியை வந்தடையும். இந்த ரயில் மதவாச்சியில் இருந்து இரவு 10.35 மணிக்கு பயணமாகி மறுநாள் காலை 4.35 மணிக்கு புறக்கோட்டையை வந்தடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

## வீதிகளில் திரியும் சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிக்க நடவடிக்கை

கொழும்பு, ஓக.14

பாடசாலைக்குச் செல்லாமல் வீதிகளில் சுற்றித்திரியும் சிறுவர்களைக் கண்டுபிடிக்கும் பொருட்டு பொலிஸார் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சுற்றிவளைப்பு இன்னும் ஓரிரு நாள்களுக்குள் ஆரம்பிக்கப்படும் எனவும் அறியவந்துள்ளது.

இலங்கைச் சட்டத்தின் கீழ் 19 வயதுக்கு மேற்பட்டவர்கள் கட்டாயமானப் பாடசாலைக்குச் செல்ல வேண்டும். ஆனால் கொழும்பு வீதிகளில் பல சிறுவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் சுற்றித்திரிகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பாடசாலைகளுக்கு செல்லாமல் வீதிகளில் சுற்றித் திரியும் சிறுவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறு நீதிவான் நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ள நிலையிலேயே பொலிஸார் இச்சுற்றி வளைப்புத் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றனர்.

இந்தத் தேடுதலில் பெண் பொலிஸாரே ஈடுபடுத்தப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு கண்டுபிடிக்கப்படும் சிறார்கள், சிறுவர் மற்றும் பெண் பொலிஸ் பிரிவுக்கு அழைத்துச் செல்லப்படுவர். அதன் பின்னர் நீதிமன்றங்களில் ஆஜர்செய்யப்படுவர்.

ஆனால், சிறுவர்கள் தடுப்புக்காவலிலோ, விளக்க மறியலிலோ வைக்கப்பட மாட்டார்கள்.

சிறுவர்களுக்கு பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் இருக்கும் பட்சத்தில் பொலிஸார் அவர்களையும் அழைத்து விசாரணை செய்வர்.

அத்துடன் பெற்றோர்கள் தனியாக நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவர். நீதிமன்றங்கள் இச்சிறுவர்களை பாடசாலைக்கு செல்லுமாறு ஆலோசனை வழங்கும்.

அவர்களுக்கு பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கு நிதி இல்லாத பட்சத்தில் பாடசாலைச் செலவை அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும் - என்றார்.

(சி)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம், ஓக.14

தொல்புரம் கிழக்கு மடத்துப் பிள்ளையார் ஆலயத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கும் தீர்த்தத்திருவிழா மறுநாள் திங்கட்கிழமை முற்பகல்10 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும்.

(203-28)

* * *

வடமராட்சி வடக்கு, கற்கோவளம் கும்பி முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 22ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

(9)

* * *

யாழ்ப்பாணம், ஓக.14

சாவகச்சேரி செருக்கல்பதி பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

அடுத்தமாதம் மூன்றாம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(9-207)

* * *

யாழ்ப்பாணம், ஓக.14

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரப் பெருந் திருவிழா நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. திருவிழாக் காலங்களில் தினமும் பிற்பகல் 3.30 மணியளவில் 'சிவானந்த வாரிதி' சிவத்திரு வ.குமாரசாமியின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

(9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை ஞானசம்பந்தர் பாலர் பாடசாலை மாணவர்களின் விளையாட்டு விழா அண்மையில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெற்றது. ஓய்வு பெற்ற திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் சி.இரவீந்திர சர்மா மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் மாணவர்களின் விநோத உடைக் காட்சியையும் படங்களில் காணலாம்.



வடமராட்சி தேவரையாளி இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் மு.வன்னியசிங்கத்தின் சேவை நயப்பு விழா அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது. மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் விழா நாயகன் விழா மேடைக்கு அழைத்து வரப்படுவதையும் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் விழா நாயகனுக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.
பாடசாலையின் ஆசிரியை ஒருவர் பாராட்டுப் பத்திரம் வழங்குவதையும் மாணவர்களில் ஒரு பகுதியினரையும் ஏனைய இரண்டு படங்களிலும் காணலாம். *(படங்கள்: சுந்தா)*

# இடம்பெயர்ந்த வடபகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்றுமாறு தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்போம்

## அமெரிக்காவின் உதவி அமைச்சின் குரோலி சொல்கிறார்

கொழும்பு, ஓக.14

வடமாகாணத்தில் வாழும் தமிழர்களின் மனிதாபிமானத் தேவைகளை இலங்கை கண்டிப்பாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்காவின் பொது விவகாரங்களுக்கான உதவி வெளி விவகார அமைச்சர் பி.ஜே.குரோலி, வடக்கு மக்களின் மனிதாபிமானத் தேவைகள் இலங்கை அரசினால் கட்டாயம் நிறைவேற்றிக் கொடுக்கப்பட வேண்டும் என்று கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது வருமாறு:-

''இலங்கை மக்களுடைய, குறிப்பாக இடம்பெற்று முடிந்த சிவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் வடபகுதி மக்களுடைய மனிதாபிமானத் தேவைகளை இலங்கை கட்டாயம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்துகிறது.இது விடயத்தில் எமது அழுத்தங்களை இலங்கை மீது தொடர்ந்தும் நிச்சயம் பிரயோகிப்போம். இது தொடர்பாக அமெரிக்கப் பிரதிநிதிகள் பலரும் இலங்கை அரசின் உயர்மட்டத்தினரை சந்தித்து பேச்சில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள்- என்றார்.

இதற்கிடையே இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதற்கோ தமிழர் சார்பாகப் பேசுவதற்கோ அமெரிக்காவுக்கு எந்த உரிமையும் கிடையாது என இலங்கை அரசு காட்டமாகத் தெரிவித்திருக்கிறது.

இலங்கையில் அதிகாரப் பகிர்வுக்கான அரசியல் தீர்வு முயற்சிகள் தாமதப்படுத்தப்பட்டு வருகின்றமை, அகதிகள் தொடர்ந்தும் முகாம்களுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றமை, மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மந்த கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறித்து அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களுக்கான உதவி வெளிவிவகார அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக் கடந்த திங்கட்கிழமை கடும் அதிருப்தி வெளியிட்டிருந்தார்.

இலங்கை அரசு அவரின் கருத்துகளை வன்மையாகக் கண்டித்துள்ளது. இலங்கையின் உள்நாட்டு விவகாரங்கள் குறித்தோ இலங்கைத் தமிழ் மக்கள் சார்பாகவோ பேசுவதற்கு பிளேக்கிற்கு எவ்வித உரிமையும் இல்லை, இது அவருக்குத் தேவையில்லாத விடயம் என்று காட்டமாகப் பதிலடி கொடுத்துள்ளார் இலங்கை அரசின் சார்பில் பேசவல்ல அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

அவ்வாறு இலங்கை அரசு பதிலடி கொடுத்த பிறகும் கூட வடக்கு மாகாணத்தில் வாழும் தமிழர்களின் மனிதாபிமானத் தேவைகளை இலங்கை கண்டிப்பாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று அமெரிக்கா மீண்டும் தற்போது வலியுறுத்தியுள்ளது. (50)

### தவறிவிட்டது

234/2, செபஸ்ரியார் வீதி, ஓட்டுமடம் என்னும் முகவரியுடைய கணேசலிங்கம் ஸ்டாலின்போல் என்பவரது தேசிய அ. அட்டை (741183773V) நேற்று நாச்சிமார் கோயிலுக்கும் கலட்டிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கூறிய முகவரியுடனோ அல்லது பின்வரும் தொ.பே.இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும். T.P:0771355047 (கண்ணன்).

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.தங்கராஜா அருணகிரிராஜா**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்)**
**யாழ்.கல்வி வலயம்**

**இன்று (14.08.2009) இல் தனது 60 ஆவது அகவையைப் பூர்த்தி செய்து சேவையிலிருந்து ஓய்வுபெறும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) திரு.தங்கராஜா அருணகிரிராஜா அவர்கள் தம் ஓய்வு காலத்தில் மேலும் சிறப்புகளைப் பெற்று வளர , வாழ வாழ்த்துகின்றோம்.**

வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம். [560302]
**வலயக் கல்விப் பணிப்பாளரும், சக பணியாளர்களும்.**

## ஏறாவூர்ப் பிரதேசத்தில் பூரணஹர்த்தால் அனுஷ்டிப்பு

கொழும்பு, ஓக. 14

மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது.

1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி இரவு 121 முஸ்லிம் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.இதனை நினைவுகூர்ந்து நேற்று முன்தினம் இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வர்த்தக நிலையங்கள் பொதுச் சந்தைகள் உள்ளிட்ட அனைத்தும் மூடப்பட்டிருந்ததுடன், பள்ளிவாசல்களில் துவா பிரார்த்தனை இடம்பெற்றன என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன (சி)

## உடுவில் பிரதேசத்தில் 61 பயனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக.14

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் 61 பயனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக 7ஆயிரத்தி ஐநூறு ரூபா வழங்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சினால் வழங்கப்பட்ட இந்த நிதி உதவியானது ஏற்கனவே முதல் கட்டமாக 7ஆயிரத்து ஐநூறு ரூபா வழங்கப்பட்ட நிலையில் மிகுதித் தொகை இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்டுள்ளது.

இளம் பெண்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

சுயதொழில் முயற்சிக்கான உதவித் தொகையை பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு நிறுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (50-68)

## முன்னாள் இராணுவத் தளபதி காலமானார்

கொழும்பு, ஓக. 14

முன்னாள் இராணுவத் தளபதியும் இணைந்த வடக்குக் கிழக்கின் ஆளுநருமான நளின் செனவிரத்தின நேற்று முன்தினம்காலை காலமானார்.

1985ஆம் ஆண்டில் இருந்து 1988ஆம் ஆண்டுவரை இலங்கை இராணுவத்தின் 10ஆவது இராணுவத் தளபதியாக இவர் கடமையாற்றினார். இவரது இறுதிக் கிரியைகள் பூரண இராணுவ மரியாதையுடன் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை பொரளை, பொது மயானத்தில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### இதயம் கனிந்த நன்றிகள்



**பொ.பாலசிங்கம்**

வங்கிச் சேவையிலிருந்து 31.07.2009 அன்று ஓய்வுபெற்ற எனக்குப் பிரியாவிடை அளித்த இலங்கைவங்கி முகாமையாளர், பணியாளர்கள், சங்கானை விரிவாக்கற் கிளையினர் அனைவருக்கும் மற்றும் வாழ்த்துரை வழங்கியும் பதக்கம் அணிவித்தும் கௌரவித்தமைக்கும், பாராட்டுப் பத்திரம், மலர் மாலை வழங்கிய எனது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், மாலைகள் அணிவித்து மங்கள வாத்தியங்களுடன் வீடுவரை அழைத்து வந்த எனது உற்றார்,உறவினர், நண்பர்கள், வர்த்தக பிரமுகர்கள் அனைவருக்கும் மேலும் எனது சேவைநலன் பாராட்டுமலர் ஒன்றைப் பத்திரிகையில் பிரசுரித்த மானிப்பாய் வர்த்தகர்களுக்கும் அனுசரணையாளர்களுக்கும் தனிப்பட்ட முறையில் என்னைப் பத்திரிகையில் பாராட்டி வாழ்த்திய எனது உறவினர், நண்பர்கள் யாவருக்கும், தொலைபேசி மூலம் எனக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தவர்களுக்கும், வீட்டிற்கு வருகை தந்து தேநீர் விருந்தில் கலந்து பாராட்டி வாழ்த்திய அனைவருக்கும் எனது உளம் கனிந்த நன்றிகளைக் குடும்பத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''லக்ஷிமி வில்லா''
வல்லை வீதி, சங்கானை.பொ.பாலசிங்கம் குடும்பத்தினர். (87877)



அறவழிப் போராட்டக் குழுவினால் தென்மராட்சியில் வலுவிழந்த பிள்ளைகளுக்கு புனர்வாழ்வு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. நிகழ்வில் விருந்தினராகப் பங்குகொண்ட சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் க.[illegible] வலுவிழந்த பிள்ளைகளுக்கான உதவிப் பொருள்கள் வழங்குவதை முதலாவது படத்திலும் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட ஜேர்மனியைச் சேர்ந்த திருமதி [illegible] வங்கிச் சேமிப்புப் புத்தகத்தை வழங்குவதை இரண்டாவது படத்திலும் கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை அதிபர் ஆ.தங்கவேல் வலுவிழந்த பிள்ளைகளுக்கு உடுபுடைவைகள் வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் பிலிப்பைன்ஸில் கடும் சண்டை: 23 சிப்பாய்கள், 20 தீவிரவாதிகள் பலி!

## மும்முர தேடுதல் வேட்டை நீடிப்பு

மணிலா, ஒக. 14

தென் பிலிப்பைஸில் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே நடைபெற்ற கடும் சண்டையில் 43 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 23 சிப்பாய்களும், 20 தீவிரவாதிகளும் அடங்குவர் என இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பெஞ்சமின் டொலோபினோ தெரிவித்தார்.

தென் பிலிப்பைன்ஸ் தீவான பெஸிலானிலுள்ள அபு சயாப் தீவிரவாதிகளின் முகாமொன்று சுற்றிவளைக்கப்பட்டது. இத்தருணத்தில் தீவிரவாதிகளுக்கும், படையினருக்குமிடையே கடும் சண்டை மூண்டது என்றும் மேஜர் ஜெனரல் குறிப்பிட்டார்.

இந்த அதிரடித் தேடுதல் நடவடிக்கையில் 400 சிப்பாய்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். மூர்க்கமான சண்டையை அடுத்து, தீவிரவாதிகள் பின்வாங்கி தலைமறைவாகிவிட்டார்கள். முகாமில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட எறிகுண்டுகள், பெருந்தொகையான ஆயுதங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன என்றும் அவர் கூறினார்.

சண்டை ஓய்ந்துவிட்டது. எனினும், தேடுதல் வேட்டை நீடிக்கின்றது. இச்சண்டையில் அபு சயாப்பின் இரு முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. சடலங்களை அடையாளங் காண்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஹைர் மொன்டுஸ், புருஜிஇன்டாமா என்னும் இவ்விரு தலைவர்களும் நீண்ட காலமாக தேடப்பட்டு வந்தவர் களாவர். இந்த உக்கிரச் சண்டையில் இவர்கள் பலியாகியிருக்கக்கூடும் என நம்பப்படுகிறது. காயமடைந்தவர்களையும், மரணித்தோரின் சடலங்களையும் ஏனைய தீவிரவாதிகள் தூக்கிச் சென்றுள்ளார்கள் என உள்ளூரதிகாரி ஒருவர் ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

அபு சயாப் தீவிரவாத இயக்கம் சமீப காலமாக தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளது. பணயப் பணத்துக்காக பலரை கடத்தியுள்ளது. குறிப்பாக கிறிஸ்தவர்களும், வெளிநாட்டினரும் இந்த இயக்கத்தால் கடத்தப்பட்டுள்ளார்கள்.



## கண்ணீர் அஞ்சலி

### நடராஜசிங்கம் கிருபாகரன்

(பரிசாரகர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை)

நேற்று (13.08.2009) வியாழக்கிழமை அகால மரணமடைந்த எமது வைத்தியசாலையின் ஊழியரின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த கவலையை அன்னாரின் குடும்பத்திற்குத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆதார வைத்தியசாலை,
தெல்லிப்பழை.

உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

# ஜப்பானில் மீண்டும் பூகம்பம் ஒருவர் பலி; 100 பேர் காயம்

ஜப்பானில் நேற்று வியாழக் கிழமையும் பூகம்பம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிட்சர் அளவு கோலில் 6.6 புள்ளி களாகப் பதிவாகியுள்ளது. இதில் ஒருவர் உயிரிழந்தார். 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். நேற்று காலை உள்ளூர் நேரப்படி காலை 10.49 மணிக்கு இப் பூகம்பம் ஏற்பட்டது. இதனால் ஜப்பானின் பல பகுதிகள் குலுங்கின.

இந்த பூகம்பத்திற்கு ஒருவர் பலியாகியுள்ளார். 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த பூகம்பத்தால், ஆழிப்பேரலை எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

தலைநகரான டோக்கியோவுக்கு கிழக்கே, 312 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஹாஜிஜோ தீவில் இப்பூகம்பம் ஏற்பட்டது. இதனால் வீடுகள் குலுங்கின. மக்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினார்கள்.

கடந்த செவ்வாய்க்கிழமையும் ஜப்பானில் பூகம்பம் ஏற்பட்டது. இதில் 110 பேர் காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

ஜப்பானில் கடந்த 4 நாள்களில் நேற்றைய பூகம்பத்துடன் 3 பூகம்பங்கள் ஏற்பட்டுள்ளன.

## மோட்டார் சைக்கிள் காணவில்லை

அப்பையா சிவா என்பவரின் மோட்டார் சைக்கிள் (NPJA 3237, OFID41199685 என்னும் இயந்திர இலக்கமுடைய T.V.S விக்ரர் சிவப்பு நிறம்) அதன் ஆவணங்களுடன் 04.08.2009 அன்று சதொச நிறுவனம் அருகே காணாமல் போய்விட்டது. கண்டவர்கள் காரைக்கால் சிவன் கோவிலடி, இணுவில் என்னும் முகவரியிலோ அல்லது 077-9507269 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## கட்டடம் தேவை

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட கணனி நிறுவனம் ஒன்றிற்கு சாவகச்சேரிப் பிரதேசத்தில் கிளை நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு நுணாவில் சந்தியிலிருந்து சங்கத்தானை வரையுள்ள பிரதேசத்தில் கண்டி வீதி அருகாமையில் 1000-1500 சதுரஅடிப் பரப்புள்ள கட்டடம் தேவை.

தொடர்புகளுக்கு:- 077 9120686

## விமான விபத்தில் 13 பேர் உயிரிழப்பு

பப்புவா நியூ கினியாவிலிருந்து செவ்வாய்க்கிழமை காலை புறப்பட்ட சிறிய ரக விமானம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 13 பேரும் உயிரிழந்துவிட்டனர் என ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது. இத்தகவலை ஆஸ்திரேலிய பிரதமர் கெவின் ரூத் அறிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களில் 9 பேர் ஆஸ்திரேலியர்கள். 3 பேர் பப்புவா நியூ கினியாவைச் சேர்ந்தவர்கள். ஒருவர் ஜப்பானைச் சேர்ந்தவர்.

இரட்டை இயந்திரங்களைக் கொண்ட இந்த விமானம் தென் பசிபிப் பகுதியான பப்புவா நியூ கினியா தலைநகர் போர்ட் மோரஸ்பியிலிருந்து கொகோடா என்ற சுற்றுலாப் பகுதிக்குச் சென்றுகொண்டிருந்தது. செவ்வாய்க்கிழமை காலை 10.53 மணியளவில் விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

இதனால் அந்த விமானம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் எனக் கருதப்பட்டது. விமானத்தைத் தேடும் பணிகள் மோசமான வானிலை காரணமாகப் பாதிக்கப்பட்டன. விமானத்தைத் தேடுவதற்காக ஆஸ்திரேலிய கடற்படைக் கப்பலும் 3 ஹெலிகொப்டர்களும் அனுப்பப்பட்டன.

மீட்புக் குழுவினர் விமானத்தின் உடைந்த பாகங்களை புதன்கிழமை கண்டுபிடித்தனர். விமானத்தில் பயணம் செய்தவர்கள் எவரும் உயிர் பிழைத்திருக்கவில்லை என ஆஸ்திரேலிய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 02 ★ 11 ★ 1938



உதிர்வு: 16 ★ 07 ★ 2009

## திருமதி பாலசிங்கம் அன்னம்மா

அன்பின் பிறப்பிடமே பாசத்தின் இருப்பிடமே
அன்பாலும் பண்பாலும் அனைவரையும் அரவணைத்தீர்
எங்கள் குடும்பம் ஆலமரமாய் விழுதுகள் விட்டு நிற்க
ஆணிவேராய் நின்ற தாயே! எம்மை
மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு எங்கு சென்றீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 16.07.2009 அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் தொலைவில் இருந்து தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் இதய பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (14.08.2009) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் குரும்பைகட்டி ஞானவைரவர் ஆலய முன்றிலில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குரும்பைகட்டி,
புலோலி வடமேற்கு,
புலோலி.

[illegible]

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சதாசிவம்

வேலணையைப் பிறப்பிடமாகவும் முடமாவடி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சதாசிவம் நேற்று (13.08.2009) வியாழக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-முத்து அவர்களின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற தவமணியின் கணவரும் சொர்ணலட்சுமி(கனடா), கனகசபாபதி(கருமாரி நகையகம்), கனகலிங்கம்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் இரகுநாதன், சுமதி, ராணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரபாகரன்(கனடா), தயாளினி (கனடா), கருணாகரன்(கனடா), தர்சன்(கனடா), தர்சினி (கனடா), லக்ஷன், குருஷேந்தன், காஞ்சீலன், கௌதமி, குருபரன், பிரான்ஸில் வசிக்கும் சுதா, தர்சன், நிசாந்தன், பிரவிந்தன், ரவீந்திரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2009) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஒரு மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

127, இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
நல்லூர்.

தகவல்:
கனகசபாபதி
மகன் (தேவிகருமாரி நகையகம்),

### திருமதி கீதா ரவீந்திரன்

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கீதா ரவீந்திரன் நேற்று (13.08.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கனகசபை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், ரவீந்திரனின் அன்பு மனைவியும் சமியன், தனுசன், நிராங்கா, ஷிவரங்கா, யசிந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14.08.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வேம்பிராய் இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேம்பிராய்,
மிசாலை வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கண்மணி பொன்னம்பலம்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் கண்மணி நேற்று (13.08.2009) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - முத்துப்பிள்ளை தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் தங்கநாயகி (இந்திரா), தங்கராணி (சந்திரா - ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் தவராசசிங்கம், சோதிராஜா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் திவ்வியா - சதீஸ்குமார், தரணீதரன் (கனடா), காயத்திரி, சியாமளா, தாரணி, நிரஞ்சன், கஜானா (ஜேர்மனி) ஆகியோரின் அம்மம்மாவும் அபர்ணாவின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, இரத்தினம், சத்தியமலர், கனகசபை, நடராசா, பாலசிங்கம், தேவராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2009) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நீர்வேலியில் உள்ள மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி மாசிவன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.
T.P.: 060 221 2758

தகவல்:
ஐ.தவராசசிங்கம் (நீர்வேலி),
ந.சோதிராஜா (ஜேர்மனி)
(மருமக்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை நடைபெறும் 63 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு

# இந்தியா முழுவதும் உச்சக் கட்டப் பாதுகாப்பு; தமிழகத்தில் ஒரு லட்சம் பொலிஸார் பணியில்

புதுடில்லி, ஓக. 14

நாளை கொண்டாடப்படும் 63ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தியா முழுவதும் உச்சக் கட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ரயில்களில் பார்சல் அனுப்ப தடை விதிக்கப்பட்டுள்ளது. முக்கிய இடங்களில் கொமாண்டோப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சென்னை நகர பாதுகாப்புப் பணியில் 10 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மாநகர எல்லைகளில் விடிய விடிய வாகன சோதனை நடத்தப்படுகிறது.

இந்தியாவின் 63ஆவது சுதந்திர தினவிழா நாளை கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் டில்லி, கொல்கத்தா, ஐதராபாத் நகரங்களில் தாக்குதல் நடத்த பாகிஸ்தான் தீவிரவாத அமைப்பான லஷ்கர் - இ - தொய்பா சதித் திட்டம் தீட்டியுள்ளது என மத்திய உளவுத்துறை எச்சரித்துள்ளது. இதைத் தொடர்ந்து, இந்தியா முழுவதும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடல் வழியாக ஊடுருவலாம் என்பதால் கடலோர பாதுகாப்பைப் பலப்படுத்தும்படி கடற்கரையோர மாநிலங்கள், யூனியன் பிரதேச அரசுகளை மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் எச்சரித்துள்ளார். அதேபோல், உள்நாட்டில் செயற்படும் நக்ஸலைட்கள், வடகிழக்கு மாநில தீவிரவாதிகளும் தாக்குதலில் ஈடுபடலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் டில்லியில் பிரதமர் தேசியக் கொடி ஏற்ற உள்ள செங்கோட்டைப் பகுதி, டில்லி பொலிஸார் மற்றும் துணை இராணுவத்தின் பாதுகாப்பு வலயத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. ரயில் நிலையங்கள் உட்பட பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தீவிர கண்காணிப்புப் போடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் எச்சரிக்கையைத் தொடர்ந்து அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேச அரசுகள் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளன. தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வெளி மாநிலங்களில் இருந்து வரும் வாகனங்கள் தீவிர பரிசோதனைக்குப் பிறகே அனுமதிக்கப்படுகின்றன. சென்னை தலைமைச் செயலகத்தில் 5 ஆயிரம் பொலிஸாரும், நகரம் முழுவதும் 10 ஆயிரம் பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றனர்.

தலைமைச் செயலகம் வழியாகச் செல்லும் எல்லா வாகனங்களும் தீவிர சோதனைக்குப் பிறகே அனுமதிக்கப்படுகின்றன. விழா நடைபெறும் நாளில் 25இற்கும் மேற்பட்ட இடங்களில் ரகசிய கமராக்கள் பொருத்தப்படவுள்ளன.

தீவிரவாதிகள், ரயில்களில் வெடிகுண்டு பார்சலை அனுப்பி தாக்குதல் நடத்தும் அபாயம் இருக்கிறது. இதை முறியடிக்க, இன்று முதல் சுதந்திர தினம் முடியும் வரை ரயில்களில் பார்சல்கள் அனுப்ப தடை விதிக்கப்பட்டுள்ளது.



சுதந்திர தினத்தை ஒட்டி திருச்சி அண்ணா விளையாட்டரங்கில் வரும் 15ஆம் திகதி பொலிஸ் அணிவகுப்பு நடைபெறுகிறது. இதற்காக மகளிர் பொலிஸார் நேற்றுமுன்தினம் ஒத்திகையில் ஈடுபட்டபோது.....

# 5 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் கட்சிகள் அனல் பறக்கும் பிரசாரம்

சென்னை, ஓக. 14

5 தொகுதிகளுக்கு வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள இடைத் தேர்தலுக்கான பிரசாரம் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது.

பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் ஊர் ஊராகச் சென்று தங்கள் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

கம்பம், இளையான்குடி, ஸ்ரீவைகுண்டம், பர்கூர், தொண்டா முத்தூர் ஆகிய 5 தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் வரும் 18ஆம் திகதி நடைபெறுகிறது. இதற்கான தேர்தல் பிரசாரத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. தலைவர்களும் இந்த தொகுதிகளில் முற்றுகையிட்டுள்ளதால் பிரசாரம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.

5 தொகுதிகளிலும் போட்டியிடும் தே.மு.தி.க. வேட்பாளர்களை ஆதரித்து கட்சியின் தலைவர் விஜயகாந்த் தீவிர வாக்கு வேட்டையாடி வருகிறார்.

தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பிரசாரம் செய்து வருகிறார்.

இதேபோல், பா.ஜ.க. மாநிலத் தலைவர் இல.கணேசன் அக்கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகிறார். காங்கிரஸ் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தங்கபாலு ஆகியோர் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வரும் 16 ஆம் திகதி இடைத்தேர்தல் பிரசாரம் நிறைவு பெறுகிறது. 18 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறும். 21 ஆம் திகதி வாக்குகள் எண்ணப்படும்.

# தொடர்ந்து விரட்டுகிறது பன்றிக்காய்ச்சல்; இதுவரை 19 பேர் பலி; 1193 பேர் பாதிப்பு



பன்றிக் காய்ச்சல் பீதி காரணமாக திருச்சி ஸ்ரீரங்கம் பாடசாலை ஒன்றில் குழந்தைகளும் ஆசிரியையும் முகக் கவசம் அணிந்துள்ளனர்.

டில்லி, ஓக. 14

பன்றிக்காய்ச்சலால் நேற்றுக் காலை புனேயில் 11 மாத குழந்தையும், 75 வயது பெண்ணும் சிகிச்சை பலனின்றி பலியானார்கள். இதையடுத்து பன்றிக்காய்ச்சல் பலி 19 ஆக உயர்ந்துள்ளது. 1,193 பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தப்படி உள்ளது. குறிப்பாக மராட்டிய மாநிலத்தில் பன்றிக் காய்ச்சல் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பரவிக்கொண்டிருக்கிறது.

நேற்று இரவுவரை இந்தியாவில் 5 ஆயிரத்து 729 பேருக்கு பன்றிக்காய்ச்சல் அறிகுறிக்கான சோதனை நடத்தப்பட்டது. இதில் 1,193 பேருக்குப் பன்றிக்காய்ச்சல் தாக்கியிருப்பது உறுதி செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஒரே நாளில் மட்டும் 115 பேருக்கு பன்றிக்காய்ச்சல் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இந்த எண்ணிக்கை உயரும் என்று அஞ்சப்படுகிறது.

நேற்றுமுன்தினம் ஒரே நாளில் மட்டும் பன்றிக்காய்ச்சலுக்கு 7 பேர் பரிதாபமாக மரணம் அடைந்தனர். நேற்றுக் காலை புனேயில் 11 மாத குழந்தையும், 75 வயது பெண்ணும் சிகிச்சை பலனின்றி பலியாகினர். இதனால் பன்றிக்காய்ச்சல் உயிரிழப்பு 19 ஆக உயர்ந்துள்ளது. இதில் புனே நகரில் மட்டும் 12 பேர் பலியாகிவிட்டனர்.

# பன்றிக்காய்ச்சல் குறித்து ஆய்வுசெய்ய மத்திய வைத்தியக் குழு தமிழகத்துக்கு

சென்னை, ஓக.14

பன்றிக்காய்ச்சல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள சென்னைக்கு மத்திய மருத்துவ குழு வந்து ஆய்வுகள் நடத்தி வருகிறது.

பன்றிக்காய்ச்சல் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், ஒவ்வொரு மாநிலத்திலும் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மத்திய அரசு கண்காணித்து வருகிறது. அதற்காக மாநிலம்தோறும் மருத்துவக் குழுக்களை மத்திய அரசு அனுப்பி அறிக்கைகளை கேட்டுள்ளது.

அந்த வகையில் தமிழகத்துக்கும் மத்திய மருத்துவக் குழு நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணிக்கு வந்தது. மத்திய சுகாதார துறை துணை இயக்குநர் டாக்டர் சுதிர், மத்திய தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் அரவிந்த் குப்தா ஆகியோர் நேற்றுமுன்தினம் சென்னையில் 3 இடங்களில் பன்றிக்காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்தனர்.

சென்னை தண்டையார்பேட்டையில் உள்ள தொற்றுநோய் வைத்தியசாலை, கிண்டியில் உள்ள கிங்ஸ் நிலையம், சென்னை பொது வைத்தியசாலை ஆகிய இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

குழந்தைகளுக்கு பன்றிக்காய்ச்சல் வராதபடி சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்று அரச வைத்தியசாலை டாக்டர்களை மத்திய மருத்துவ குழு அறிவுறுத்தியது.

# ஆஸியில் இந்திய மாணவர் அமைதிக்காக இசை நிகழ்ச்சி நடத்துகின்றார் ரஹ்மான்

சென்னை, ஓக. 14

ஆஸ்திரேலிய இளைஞர்களிடையே இந்திய மாணவர்கள் மீது அன்பு ஏற்பட ஏ.ஆர்.ரஹ்மான் சிறப்பு இசை நிகழ்ச்சி நடத்துகிறார்.



ஆஸ்திரேலியாவில் சிட்னி, மெல்போர்னில் இந்திய மாணவர்கள் மீது கடந்த 2 மாதங்களாகத் தொடர் தாக்குதல் நடந்து வருகிறது. இந்தச் சூழலை மாற்ற மத்திய அரசு பல்வேறு முயற்சியில் இறங்கியுள்ளது.

இந்நிலையில் இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் புது முயற்சியில் இறங்கியுள்ளார். அங்கு அமைதியை ஏற்படுத்துவதற்காக விரைவில் இசை நிகழ்ச்சியை ஆஸ்திரேலியாவில் ரஹ்மான் நடத்தவுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும்போது -

இந்திய மாணவர்கள் மீது நடந்த தாக்குதல், இரு நாட்டு மாணவர்களிடையே வெறுப்பை ஏற்படுத்தி உள்ளது. அதை முற்றிலுமாக அகற்றி அமைதிச் சூழல் ஏற்பட இசை நிகழ்ச்சி நடத்த உள்ளேன். இது கலாசாரம் மற்றும் ஆன்மிகத்தில் பிளவுபட்டிருப்பவர்களின் மனதை ஒன்றிணைக்கும் என்று நம்புகிறேன்.

எனது இசைப் பயணத்தில் இதுவொரு முக்கிய நிகழ்ச்சி - என்றார்.

# நடிகர் லோரன்ஸுக்கு தமிழக அரசின் விருது

## சுதந்திர தினத்தில் கருணாநிதி வழங்குகிறார்

சென்னை, ஓக. 14



நடிகர் ராகவ லோரன்ஸ், அமர் சேவை சங்கத்தின் சங்கர்ராமன் உள்ளிட்டோருக்கு சிறப்பு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சுதந்திர தினத்தன்று (சனி) பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு கோட்டையில் கொடியேற்றும் கருணாநிதி விருதுகளை வழங்குகிறார்.

ஊனமுற்றோர் நலவாழ்வில் சிறந்து பணி செய்த நிறுவனமாக சென்னையைச் சேர்ந்த 'பாத்வே' நிறுவனத்துக்கும், ஊனமுற்றோர் நலவாழ்வில் சிறப்பாக சமூக சேவையாற்றியமைக்கு நடிகரும், நடன இயக்குநருமான ஆர்.லோரன்ஸுக்கும் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விருது அறிவிக்கப்பட்டது குறித்து நடிகர் ராகவ லோரன்ஸ் கூறுகையில் -

மூன்று வருடங்களுக்கு முன்பு ஊனமுற்றோர் குழந்தைகளுக்கு நடனம் சொல்லிக் கொடுப்பதற்காக சென்னை அசோக் நகரில் நடனப் பாடசாலையைத் தொடங்கினேன். அவர்களுக்கு கல்விதான் முக்கியம் என்பதை உணர்ந்து அதைக் கல்விச் சாலையாக மாற்றி விட்டேன். அதற்காகதான் நான் உழைத்து வருகிறேன். சமீபத்தில் 40 குழந்தைகளுக்கு இலவச அறுவைச் சிகிச்சைக்காக உதவியுள்ளேன். தமிழக அரசின் இந்த விருது என் லட்சிய பயணத்துக்கு மேலும் வேகம் கொடுக்கும் - என்றார்.

# குலாம் நபி ஆசாத்துக்கு பாக். தீவிரவாதிகள் குறி

## உளவுத்துறை உஷார்

மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத்துக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர் தீவிரவாதிகள் குறி வைத்துள்ளனர் என உளவுத்துறை எச்சரித்துள்ளது.

மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத், காஷ்மீர் மாநில முதல்வராக பதவி வகித்தவர். அவரைக் கொல்ல பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என மத்திய உளவுத் துறைக்கு (ஐ.பி.) அண்மையில் தகவல் கிடைத்தது. இவரது பெயர் தவிர ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்தின் பெயரும் தீவிரவாதிகளின் கொலைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளமை தெரியவந்தது.

இதுதொடர்பாக அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய உளவுத்துறை கடந்த வாரம் அவசரத் தகவல் ஒன்றை அனுப்பியது.

அமைச்சர் குலாம் நபி ஆசாத்தை டில்லியில் தாக்குவது கஷ்டம் என்பதால் அவர் வெளியூர் சுற்றுப்பயணம் செய்யும்போது தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். இதனால் அவர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இணைந்த உள்ளங்கள் பிரிவதற்கு முன்பு காவிரிப் பிரச்சினையைப் பேசித் தீர்க்குக!

## கருணாநிதியிடம் ராமதாஸ் வலியுறுத்து

சென்னை, ஓக. 14

சிலைத் திறப்பு விழாக்கள் மூலம் தமிழகம் மற்றும் கர்நாடகத்திற்கு இடையே இணக்கமான சூழல் நிலவும் தற்போதைய நிலையில், காவிரிப் பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காணும் முயற்சியை முதல்வர் கருணாநிதி உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

திண்டிவனத்தையடுத்த தைலாபுரத்தில் நேற்று பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

அப்போது, பேச்சு மூலம் தீர்க்கப்பட முடியாத பிரச்சினையே இல்லை என்றும், தமிழ்நாட்டிற்கும், கர்நாடகத்திற்கும் இடையே உள்ள பிரச்சினைகளை பேச்சின் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் கர்நாடக முதல்வர் எடியூரப்பா பெங்களூர் வள்ளுவர் சிலை திறப்பு விழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் தமிழக முதலமைச்சரின் முன்னிலையில் கூறியிருக்கிறார்.

1968ஆம் ஆண்டு நடந்த முதல் பேச்சில் பொதுப்பணித்துறை அமைச்சர் என்ற முறையில் கலந்து கொண்ட கருணாநிதி இன்றைக்கு பொதுப்பணித்துறைக்கும் பொறுப்பு வகிப்பது பொருத்தமானதுதான்.

32 முறை பேசித் தீர்க்க முடியாத காவிரிச் சிக்கலுக்கு இப்போது பேச்சின் மூலம் தீர்வு காணும் முயற்சியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இதில் தாமதம் கூடாது. இணைந்த உள்ளங்கள் பிரிவதற்கு முன்பாகவே பேச்சைத் தொடங்க வேண்டும்.

எடியூரப்பாவுடன் பேச்சு நடத்தி காவிரிச் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்பது கூட வேண்டாம். குறைந்தபட்சம் 2001ஆம் ஆண்டு நடுவர் நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பின்படி இப்போது உடனடியாக தமிழகத்திற்கு தண்ணீர் பெற வேண்டும்.

அதன் மூலம் இரு மாநில மக்களின் உள்ளங்களில் புதிய இணைப்புப் பாலத்தை ஏற்படுத்த வேண்டும் - என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி சாவகச்சேரிக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

சாவகச்சேரி நகரசபையில் ஆளுநரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வரவேற்கப்படுவதையும் கர்ப்பிணி தாய்மாருக்கு அவர்கள் சத்துணவு பொதிகள் வழங்குவதையும் ஆளுநரின் வருகையின் நினைவாக பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி மரம்நடுவதை மேல் வரிசைப் படங்களிலும்-

ஆளுநர்,அமைச்சர், நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் ஆகியோர் உரை யாற்றுவதையும் கலந்துகொண்ட பொது மக்களையும் கீழ்வரிசையிலும் காணலாம். (படங்கள்: தென்னவன்)

# சாவகச்சேரி மயானம், விளையாட்டு மைதானம் இன்று முதல் பொதுமக்கள் பாவனைக்கு அனுமதி

## சாவகச்சேரியில் ஆளுநர் தகவல்

யாழ்ப்பாணம், ஓக.14

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானம், நகர சபை பொது விளையாட்டு மைதானம் இன்று தொடக்கம் மக்கள் தடையின்றி பயன்படுத்த முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி அறிவித்துள்ளார்.

நேற்று சாவகச்சேரி நகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கூடியிருந்த பொதுமக்கள் மத்தியில் பேசுகையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

யாழ். மாவட்டத்திற்கு நான் புதியவனல்ல. ஒவ்வொரு பிரதேசத்தின் அனைத்து நிலைமைகளையும் நான் நன்கறிவேன்.

சாவகச்சேரி நகரப்பகுதிக்கு ஏற்பட்ட சேதங்களை முழுமையாக அறிந்துள்ளேன். எனது சேவைக் காலத்தில் நகரத்தின் வளர்ச்சிக்கும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை புனரமைப்புக்கும் என்னாலான முயற்சிகளை மேற்கொண்டு விரைவில் சிறந்த நகரமாக்க நடவடிக்கை எடுக்கப்பேன்.

இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி மயானம், பொது விளையாட்டு மைதானம் ஆகியவை பொது மக்கள் முன்னரைப் போல பயன்படுத்தலாம். - என்றார்.(1-207-131)

## இலங்கை வங்கியின் மேற்றரக் கிளையில் நாளை சேவை இட ம்பெறாது

யாழ்ப்பாணம், ஓக. 14

இலங்கை வங்கியின் யாழ். அதிமேற்றரக் கிளையில் இடம்பெறும் விசேட, சனிக்கிழமை வாடிக்கையாளர் சேவை நாளை இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளையின் தரத்தை மேம்படுத்துத்தும் நோக்கில் திருத்த வேலைகள் நாளை நடைபெற இருப்பதால் விசேட சேவை நாளை நிறுத்தப்பட்டுள்ளதாகவும்-

இதனால் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருத்தம் தெரிவிப்பதாகவும் - வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் தெரிவித்தார். (1)

## சமாதான வார நிகழ்வுகள் இன்றும் நாளையும்

வண்ணை, ஓக. 14

யாழ். சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகம் இம்மாதம் தொடங்கி அடுத்த புரட்டாதி மாதம் 21 ஆம் திகதி வரையான ஒவ்வொரு நாளும் சமாதான வார நிகழ்வுகளைப் பரவலாக நடத்துவற்கு ஒழுங்களைச் செய்துள்ளதாக செயற்றிட்ட இணைப்பாளர்கள் செல்வி சோபனா யோகலிங்கம் மற்றும் செல்வி நிரஞ்சினி காஸ்மீர் புஸ்பராசா ஆகியோர் தெரிவித்தனர்.

இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் மதியம் 12 மணிக்கும் கைதடி, நவபுரம் சனசமூக நிலையம் மற்றும் கைதடி மத்தி, வளர்மதி சனசமூக நிலையம் ஆகியவற்றில் சர்வதேச சமாதான தின விழிப்புணர்வு கருத்தரங்கு நடை பெறும்.

நாளை சனிக்கிழமை சுண்டிக்குழி கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தில் சிறுவர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கும் -

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தில் முற்பகல் 10 மணிக்கும் உடுவில் புனித பவுல் தேவாலய வளாகத்தில் மாலை 4 மணிக்கும் இளைஞர்களுக்கான சமாதானவார வன்முறையற்ற தொடர் பாடல் கருத்தரங்களும் இடம்பெற இருக்கின்றன.

(1-160)

## ஆளுநர், அமைச்சர் குழுவுக்கு சாவகச்சேரியில் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஓக.14

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.எஸ். டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் க. கணேஸ் மற்றும் மாகாண உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேற்று சாவகச்சேரிக்கு விஜயம் செய்தனர்.

முதலில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை பார்வையிட்ட பின்னர் சாவகச்சேரி நகரசபை அலுவலகத்திற்கு வருகை தந்தபோது மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது

நகரசபை கேட்போர் கூடத்தில் நகர சபை செயலாளர் திருமதி கு. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆளுநர், அமைச்சர் ஆகியோர் உரையாற்றினர்.

நகரசபையினால் மேற்கொள்ளப்படவுள்ள கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் ஆகியோருக்கான சத்துணவுப் பொதி விநியோகிக்கும் திட்டத்தினை ஆளுநரும் அமைச்சரும் ஒன்றிணைந்து வழங்கி ஆரம்பித்து வைத்தனர்.

மாகாண ஆளுநரின் விஜயத்தையொட்டி நகரசபை முன்றலில் மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி மரக் கன்றினை நட்டார். (1-207 )

## வவுனியா தேர்தலில் ஏன் தோல்வி? ஆலோசகர்களுடன் ஜனாதிபதி ஆராய்வு!

கொழும்பு, ஓக.14

இடம்பெற்று முடிந்த வவுனியா நகர சபைத் தேர்தலில் அரசுக்குப் படுதோல்வி ஏற்பட்டிருப்பது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமக்கு மிகவும் நெருக்கமான ஆலோசகர்களுடன் இரகசியமாகக் கூடி ஆராய்ந்திருக்கிறார் என்று தெரிய வருவதாக இணைத்தளம் ஒன்று பிரஸ்தாபித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோற்கடித்து அதன் தலைவர் வே.பிரபாகரனைக் கொன்றுள்ள நிலையிலும், அரசுக்கு வவுனியா நகரசபைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்கான காரணங்கள் என்ன என்று அவர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளார்களெனவும் தெரியவருகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து தமிழ் மக்களை விடுவித்திருந்தும்கூட, தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுப்போமென வாக்குறுதி வழங்கியிருந்தும் கூட, வவுனியா தமிழ் மக்கள் அரசுக்கு வாக்களிக்கத் தவறியுள்ளமை குறித்து ஜனாதிபதியும் அவரது ஆலோசகர்களும் பேரதிர்ச்சியை அக்கூட்டத்தில் வெளிப்படுத்தினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. புலிகள் முற்றாக அழிக்கப்பட்ட பிற்பாடு கூட புலி ஆதரவுக் கொள்கை, தமிழ்த் தேசிய உணர்வு, சுயாட்சி குறித்த சிந்தனை ஆகியன இன்னமும் தமிழ் மக்களிடையே உயிரோடு இருப்பதையே இத் தேர்தல் முடிவு வெளிப்படுத்துகின்றது என்பதை ஜனாதிபதியும் ஆலோசகர்களும் மிகுந்த கவனத்துக்கு எடுத்துக் கொண்டார்கள் எனவும் தெரியவருகிறது.

இந்நிலையில் தமிழ் மக்கள் எதிர்காலத் தேர்தல்களிலும் அரசுக்கு எதிராகவே வாக்களிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏராளமாக இருக்கின்றன என்றும் அக்கூட்டத்தில் அச்சம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்குப் பிரதேசங்கள் மீது அரசு விசேட கவனம் செலுத்தி அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் எதிர்காலத் தேர்தல்களில் அங்கு வெற்றி பெறலாம் என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு [illegible] தெரிவித்திருக் கிறார் என்றும் இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

## வடமராட்சிக்கு ஆளுநர் விஜயம்

நல்லூர், ஓக. 14

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வடக்குமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி நேற்று வடமராட்சிக்கு வந்திருந்தார்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாகாணசபையின் பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி, யாழ். அரச அதிபர் கே.கணேஸ் ஆகியோர் சகிதம் ஆளுநர் வடமராட் சிக்கு வந்திருந்தார்.

கரணவாயில் அமைக்கப்படும் கமநல நிலையத்தையும் பருத்தித்துறையில் புதிதாக கட்டப்பட்டுவரும் புதிய சந்தைக் கட்டடத்தையும் பார்வையிட்டார்.

சந்தையின் மேல்மாடிக்கட்டடப் பணியை துரிதமாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து ஆளுநர் கலந்துரையாடினார். வர்த்தகர் சங்கத் தலைவர் சி.ப்த்மநாதன் மகஜர் ஒன்றைக் கையளித்தார். (1-253)

## ஆயுள்வேத திணைக்கள ஆணையாளர் இன்று விஜயம்

வண்ணை, ஓக.14

கைதடி அரச ஆயுள்வேத சித்த போதனா வைத்தியசாலைக்கு கொழும்பு ஆயுள்வேத திணைக்கள ஆணையாளர் திருமதி ரமணி குணவர்த்தன இன்று வெள் ளிக்கிழமை விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருப்பதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் (ஜூலை) கைதடி அரச ஆயுள்வேத சித்த போதனா வைத்தியசாலைக்கு சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் சித்த மருத்துவத்துறை அமைச்சர் ஆகியோர் வருகை தந்தனர்.

அதனைத் தொடர்ந்து சித்த மருத்துவத்துறை ஆணையாளர் வருகை தருவது இதுவே முதல் தடவையாகும். மேலும் வைத்தியசாலையின் இன்றைய நிலைமையைப் பார்வையிட்டு தேவைகளை அறிந்து செல்லும் நோக்குடனேயே அவரது வருகை அமையுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (1-160)

## மழலைகள் விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம், ஓக.14

காரை கிட்ஸ் பார்க் மழலைகள் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 8.30மணிக்கு காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் உள்ள காரை கிட்ஸ் பார்க் விளையாட்டு மைதானத்தில் நடைபெறஉள்ளது.

காரை கிட்ஸ் பார்க் அமைப்பின் தலைவரும் காரைநகர் பாலாவோடை அ.மி.த.க. பாடசாலை ஆசிரியருமான க.நேர்த்திராஜனந்தன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம், திருமுருகன் கொம் நெற் உரிமையாளர் கே.கலாதரன் ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளனர். (1-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் திருத்தச் சட்டமூலத்தின் சர்ச்சைக்குரிய அம்சங்களை நீக்க தெரிவுக் குழுவில் இணக்கம்

## புதிதாகத் தயாரித்து சபையில் சமர்ப்பிக்க முடிவு

கொழும்பு, ஓக.14

இன, மத, சமூகப் பெயர்களில் இயங்கும் கட்சிகளின் அங்கீகாரத்தை ரத்துச் செய்யும் வகையில் நாடாளுமன்ற தேர்தல்கள் திருத்தச் சட்ட மூலத்தில் முன்மொழியப்பட்டிருக்கும் சர்ச்சைக்குரிய பகுதிகளை முற்றாக நீக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டத் திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு, அதன் தலைவரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தணா தலைமையில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் கூடியது. அப்போது அரசாங்க மற்றும் எதிர்க்கட்சிகளுக்கிடையில் இந்த இணக்கம் காணப்பட்டது.

இந்தத்திருத்தச்சட்டமூலம் நாடாளுமன்றத்தின் முதல் வாசிப்புக்கு விடப்பட்டிருந்த நிலையில், அதில் உள்ள ஏற்பாடுகள் நாட்டின் அரசமைப்புக்கும் சர்வதேச சட்டங்களின் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளுக்கும் முரணாக அமைந்துள்ளதாகத் தெரிவித்து ஐ.தே.கட்சி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன தனித்தனியே உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்துள்ளமை தெரிந்ததே.

இதற்கிடையில் சிறுபான்மை மக்களின் நலன்கள் இந்தச்சட்டமூலத்தினால் மீறப்படும் என்பதை நாடாளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தில் பங்கு கொண்ட அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளதாக இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

சட்டமூலத்தில் உள்ள சர்ச்சைக்குரிய அம்சங்களை நீக்குவதற்கும் சட்டமூலத்தை புதிதாகத்தயாரித்து முன்வைப்பதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர்களான டியூகுணசேகர, திஸ்ஸவிதாரண, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூத் ஹக்கிம், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் சட்டமூலத்தால் ஏற்படக்கூடிய பாதகங்கள் குறித்து எடுத்துக் கூறினர்.

திருத்தச்சட்டத்தில் சர்ச்சைக்குரிய விடயங்களை நீக்கி, புதிய சட்டமூலத்தை தயாரித்து அதை தெரிவுக் குழுவில் சமர்ப்பித்து அதன் அங்கீகாரத்துடன் நாடாளுமன்றத்தில் சமர்பிப்பது என்றும் உடன்பாடு காணப்பட்டது.

இன, சமயரீதியிலான பெயர்களைக் கொண்டு புதிதாகக் கட்சிகளைஅமைப்பதற்கே சட்டத்திருத்தம் வரையப்பட்டதாகவும், ஏற்கனவே உள்ள கட்சிகளுக்கு பாதகம் ஏற்படப் போவதில்லை என்றும் தெரிவுக்குழுவின் தலைவர் தினேஸ் குணவர்த்தணா தெரிவித்தார்.

இந்தக் கருத்தை சகல கட்சிகளின் பிரதிநிதிகளும் எதிர்த்ததையடுத்து சர்ச்சைக்குரிய விடயங்களை நீக்குவது என முடிவுசெய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, சட்டமா அதிபர் மொஹான் டி சில்வா மற்றும் ஐ.தே.கட்சி உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மலையகமக்கள் முன்னணி உறுப்பினரான பி.இராதாகிருஷ்னன், அமைச்சர் பி.தயாரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-1)

## கொழும்பில் 12...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்கொலைதாரி ஒருவர் கொழும்புக்குள் ஊடுருவியுள்ளார் என்று வெளியான புலனாய்வுத் தகவலை அடுத்து தொடர்ச்சியாக கொழும்புக்குள் இடம்பெற்ற தேடுதலின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கல்கிஸை, தெஹிவளை, வெள்ளவத்தை, பம்பலப்பட்டி, கொள்ளுப்பிட்டி, கொட்டாஞ்சேனை, மட்டக்குளிய, கொழும்பு 7 ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட தேடுதலில் நூற்றுக்கும் அதிகமான தமிழர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

கைதான 12 பேரும் வடக்கு-கிழக்குப் பிரதேசம் மற்றும் மலையகம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## அரசுக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் மனோகணேசன், ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சிகளின் கூட்டணியை அமைப்பது தொடர்பாக கூடி ஆராய்ந்துள்ளார்களென ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சிகளால் கைச்சாத்திடப்பட இருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கை யின் மாதிரியில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சரத்துக்களை உள்ளடக்க வேண்டாமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுக்கொண்டாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர, எதிர்க்கட்சிகளின் கூட்டணி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யானைச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவது குறித்து தமக்கு ஆட்சேபனைகள் கிடையாது என்று இக்கூட்டத்தின் போது எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார் என்றும் தெரிய வருகிறது. மனோகணேசன், ரவூப் ஹக்கீம் ஆகியோரும் யானைச் சின்னம் தொடர்பில் ஆட்சேபிக்க வில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**ஜனாதிபதி தடுக்கக் கூடும் எனச் சந்தேகம்**

இப் புதிய கூட்டணியைத் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யவிடாமல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தடுத்துவிடக் கூடும் என்றும் குறித்த கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் தம்மால் தேர்தல் திணைக்களத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருக்கும் தேசிய கவுன்ஸிலின் கீழ் இப் புதிய கூட்டணியை இணைத்துக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியுமென மங்கள சமரவீர அக்கூட்டத்தில் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறாரெனவும் தெரியவருகிறது. புதிய கூட்டணி தொடர்பில் இணக்கப்பாட்டை எட்டியுள்ள நிலையில் அது தொடர்பின் புரிந்துணர்வு உடன்படிக்கையை ஒக்ரோபர் மாதத்துக்கு முன்பாகவும் செப்ரெம்பர் 09 ஆம் திகதிக்கு பின்பாகவும் தாங்கள் கட்டாயம் கைச்சாத்திடவேண்டுமென்று ரணில் விக்கிரமசிங்க அக்கூட்டத்தில் ஏனையோருக்கு வலியுறுத்தி இருக்கிறாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

செப்ரெம்பர் 09 ஆம் திகதிக்கு முன்னர் முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாமென்று தமது சோதிடர் தமக்குத் தெரிவிக்கிறார் என்று ரணில் விக்கிரமசிங்க அக்கூட்டத்தில் ஏனைய கட்சித் தலைவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார் எனவும் தெரியவருகிறது. இந் நிலையில் குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கையை செப்ரெம்பர் மாதத்தின் மூன்றாம் வாரமளவில் கைச்சாத்திடுவதற்கு எதிர்க்கட்சிகள் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன என்றும் தெரிய வருகிறது.

(அ-சி)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளின் எஞ்சியிருக்கும் உறுப்பினர்களுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் புலனாய்வுப் போரின் சில பகுதி களைப் புலப்படுத்துகின்றன எனவும் ரொய்ட்டர் குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தனிமைப்படுத் தப்பட்ட உறுப்பினர்கள் சிலர் செயற்படு கின்றனர். வெளிநாடுகளிலுள்ள உறுப்பினர்கள் ஆதரவாளர்களிடமிருந்து அவர்கள் உத்தரவுகளைப் பெறுகின்றனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தலைமை இல்லாத போதிலும் அவர்கள் சில சதித்திட்டங்களில் ஈடுபடலாம் எனவும் உதய நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்துக்கு பிந்திய சூழலில் இலங்கைக்கு கிடைத்துள்ள வெற்றிகளைத் தற்கொலைத் தாக்குதல் அல்லது கெரில்லாத் தாக்குதல் முற்றாக சிதறடித்து விடும் எனத் தெரிவித்துள்ள ரொய்ட்டர், அரசு இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதைத் தடுக்க விரும்பலாம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

## ஜனாதிபதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற சிறிலங்கா அரச தலைவர் தேர்தலின்போது ஜே.வி.பி.யுடன் மகிந்த ராஜபக்ஷ செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 7ஆவது சரத்தை மேற்கோள்காட்டியுள்ள ரில்வின் சில்வா, அதன்படி தனது முதலாவது பதவிக்காலம் முடிவதற்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ராஜபக்ஷ இல்லாது ஒழிக்க வேண்டும் என்று தமது கடிதத்தில் சுட்டிக்காட்டி உள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை இல்லாது ஒழிப்பதில் தொடக்கத்தில் இருந்தே ஜே.வி.பி. உறுதியாக இருந்து வருகின்றது. 1982 ஆம் ஆண்டில் நடைபெற்றபோதே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை இல்லாது ஒழிக்கும் நோக்குடன் அரசியல்வாதியற்ற ஒருவரை அப்பதவிக்கு நியமிக்க வேண்டும் என தனது கட்சி பரிந்துரை செய்ததையும் ரின்வின் சில்வா எடுத்துக்காட்டியுள்ளார்.

1994 ஆம் ஆண்டில் சந்திரிக்கா குமாரதுங்க மூலமும் இதேவிடயத்தை தமது கட்சி வலியுறுத்தியது எனவும் ஆனாலும் அவர் அதில் அக்கறை காட்டவில்லை என்றும் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

நீங்கள் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாமல் மற்றொரு முறை நிறைவேற்று ஜனாதிபதி பதவிக்குத் தேர்தல் நடத்துவது நீதியற்றது, முறையற்றது. 2005 ஆம் ஆண்டில் இந்த நாட்டின் சார்பில் எம்முடன் செய்து கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் இந்தச் செயல் மீறுகின்றது என்று ரின்வின் சிலல்வா ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் காட்டமாக எழுதியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதித் தேர்தலுக்கான விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 'மஹிந்த சிந்தனை'யின் 84ஆவது பக்கத்திலும் நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் ஜே.வி.பியின் செயலாளர் ஜனாதிபதிக்கு தாம் நேற்று அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

## பொலிஸார் கைது..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டம் மேற் கொண்டனர். பொலிஸ் நிலையத்தின் மீது கல்விச்சு மேற்கொள்ளப்பட்டது. கட்டடத்தின் சில பகுதிகளுக்கு சேதம் ஏற்பட்டது.

பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டதைத் தொடர்ந்து அதன் பொறுப்பதிகாரி பலத்த பாதுகாப்புடன் வெளியேற்றப்பட்டார். கலவரத்தில் அவருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டன எனத் தகவல்கள் வெளியாகின.

அங்குலான பகுதி மக்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக கரையோரப் பகுதி ரயில் சேவை சுமார் ஒருமணி நேரமாகப் பாதிக்கப்பட்டது.

நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காகப் பின்னர் அப்பகுதிக்கு இராணுவத்தினரும் கலகம் அடக்கும் பொலிஸாரும் அழைக்கப்பட்டனர்.

அங்குலான பொதுஜய பாடசாலைக்கு அருகில் வைத்து புதன்கிழமை மாலை தினேஷ் தரங்க பெர்ணான்டோ, தனுஷ்ஹா உதயா என்ற இரு இளைஞர்களும் பொலிஸாரால் கைது செய்து அழைத்துச் செல்லப்பட்டனர் என அவர்களின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இருவரும் வியாழக்கிழமை காலை விடுதலை செய்யப்படுவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்னர்.

எனினும் வியாழக்கிழமை காலை தாம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற வேளை அவர்களைக் கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து விட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர் என்றும், தாம் அங்கு செல்லத் தயாராகிக் கொண்டிருந்த வேளை இருவரினது சடலங்களும் காணப்படுகின்றன எனத் தகவல் கிடைத்தது என்றும் தினேஷ் பெர்ணான்டோவின் தந்தை சங்கதாஸ பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

தினேஷ் பெர்ணான்டோவின் சடலம் இரத்மலான கூட்டுறவு நிலையத்துக்கு அருகில் காணப்பட்டுள்ளது.

தனுஷ்ஹாவின் சடலம் லுனாவ பாலத்திற்கு அருகில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இரு இளைஞர்களும் பொலிஸாரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டு அதிகாலையில் ஜீப்பில் ஏற்றப்பட்டு கொண்டுசெல்லப்பட்டனர் என்று, அங்குலான பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வேறு சந்தேக நபர்கள் தன்னிடம் தெரிவித்தனர் என்றும் இறந்தவர்களில் ஒருவரின் தந்தையான சங்கதாஸ பெர்ணான்டோ குறிப்பிட்டுள்ளார். .

அங்குலான பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் நண்பி ஒருவரைக் கேலி செய்தமைக்காகவே இரு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டனர் என்றும் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை, சடலமாக மீட்கப்பட்ட இரு இளைஞர்களும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டிருந்தனர் என பொலி ஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக அங்குலான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் ஆறு பொலிஸாரும் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டனர். அங்கு புதிய பொறுப்பதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(அ-சி)

## அரசின் நீண்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிடப்பட்ட நடவடிக்கையின் மூலமே கே.பி. கைது செய்யப்பட்டார் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் இது குறித்துக் கூறிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாதுகாப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் கே.பி. குறித்து உன்னிப்பாக அவதானித்து வந்தனர்.

கே.பியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் புலிகளின் சர்வதேச வலையமைப்புக் குறித்துத் தகவல்கள் பெறப்பட்டன.

சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகள் பாரிய அமைப்பாக வளர்ச்சியடைந்துள்ளனர்.

இலங்கை மேற்குலக நாடுகளுடன் மாத்திரமே உறவை வளர்க்கும் பாரம்பரிய முறைமையிலிருந்து விலகியுள்ளது. இதன்மூலம் பல நன்மைகள் கிடைக்கின்றன - என்றார்.

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதல்கள் இடம்பெற்றதை உயர் பரிமாணம் கொண்ட செய்மதிப் படங்கள் மூலம் நாம் தீவிரமாக ஆராய்ந்து உறுதிசெய்துள்ளோம்.

மேலும் புதிதாக புதைகுழிகள் தோண்டப்பட்ட இடத்தையும் ஆட்லறிச் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததைக் காண்பிக்கும் நிலத் தோற்றத்தையும் காணமுடிகிறது.

மே மாதம் 6 ஆம் திகதி ஆராயப்பட்ட செய்மதிப்படங்களில் இடம்பெயர்ந்தவர்களின் பல கூடாரங்களும், 195 புதைகுழிகளுடன் கூடிய மயானமும் தென்பட்டது.

மே 24ஆம் திகதி செய்மதிப் புகைப்படங்களில் முந்தைய மயானத்திலிருந்து செல்லும் வீதியொன்று துப்புரவு செய்யப்பட்டு சடலங்களை புதைப்பதற்கு மேலும் பல புதைகுழிகள் தோண்டப்பட்டமை தெரியவந்துள்ளது.

விஞ்ஞான முன்னேற்றத்திற்கான அமெரிக்க சங்கத்தின் ஆய்வுகளின் மூலம் இப்பகுதியில் 342 புதிய புதைகுழிகள் தோண்டப்பட்டுள்ளமையும் மதிப்பிடப்பட்டுள்ளது.


மே மாதம் மோதல்கள் தீவிரமடைந்தமையைத் தொடர்ந்து செய்மதிப் புகைப்படங்களில் 342 புதிய புதைகுழிகள் தென்பட்டன என்று அமெரிக்க விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் லஸ்ஸ் புரொம்லி தெரிவித்தார்.

நிரந்தரக் கட்டடங்கள் பல சேதமடைந்துள்ளன. அந்தப் பிராந்தியம் முழுவதும் ஷெல்வீச்சினால் பாதிப்படைந்திருந்தது என அவர் குறிப்பிட்டார்.

முன்னர் எடுக்கப்பட்ட செய்மதிப் படங்கள் மற்றும் தற்போதைய செய்மதிப் புகைப்படங்களை ஒப்பிடும்போது பெரும் எண்ணிக்கையானோர் இடம்பெயர்ந்தமை தெரியவந்துள்ளது. தொடர் ஆட்லறித் தாக்குதலால் உருவான பாரிய புதைகுழியொன்று விரிவாக்கப்படுவதையும், மோட்டார் தளங்களையும் கண்டோம் - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லப்பா கண்மணி



கைதடியைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பா கண்மணி நேற்று (13.08.2009) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும், சுப்பிரமணியம், வள்ளிநாயகி, அமரர் இரத்தினம், சின்னராசா, இரத்தினராசா, இந்திராணி, ஆனந்தராசா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவளராணி, அமரர் உஸ்திரா, லலிதாதேவி, இராசமலர், வசந்தாதேவி, லலிதாதேவி(சுவிஸ்), ஈஸ்வரானந்தம் ஆகியோரின் மாமியாரும், சுரேந்திரன் (இந்துநாகரிக ஆசிரியர்) சுபோதினி, தினேஸ்சங்கர் (சிற்றூர்தி ஊழியர்), றபித்வஜன் (ஜனசக்தி காப்புறுதி கம்பனி), சயிதா, ஸ்ரீவாணி, ஸ்ரீகணன், ஸ்ரீறம்ஜன், மகிழீசன் (பல்கலைக்கழகம்) மதனீசன், றோகீசன், நதீசன், நவிஷா, அபிமன்யு (சுவிஸ்) பூமிகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அளவெட்டி கேணிப்பட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.


GEOGRAPHY Paper Class
செவ் - வியாழ. 4.30-6.00
2010 A/L
* கடந்தகால வினாக்களும் மாதிரி வினாக்களும்
ஆரம்பம் - 18.08.2009 செவ் - 4.3
NEW SCIENCE HALL
யாழ்ப்பாணம்.

SHAMROCK
சச்சமோட்டை, யாழ்.
* Gr. I முதல் O/L வரை
* ENG. Med. 6 To11
* O/L DAY CLASS

பொருளியல்
K.பிரதீபன் (B.B.A)
A/L 2010 பணம் வங்கி Sat, Sun 4 P.m.
A/L 2011 சந்தைப் பொருளாதாரம் Sat, Sun 5 P.m.
NCA கல்வி நிலையம் கே.கே.எஸ். றோட், இணுவில்.

நாளை ஆரம்பம்
A/L 2010 PAPER CLASS Sat, Sun 3 P.m
A/L 2011 சந்தைப் பொருளாதாரம் Sat, Sun 2 P.m
பொருளியல் K.பிரதீபன் (BBA)
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்
GIT (G.C.E A/L)
ICT (Grade 10,11) English &Tamil medium
Course Fees (Monthly 300/=)
ஆசிரியர் :-திரு.சி.பிரணவன்
Kids Programming (Year1-10)
MSO, DTP, VISUAL BASIC
Hardware
Internet e-mail
Start on: 15,17.08.2009
Softview Computer College
55,Arasady Road,


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




ஆசிரியர்:-
திரு.என்.சந்திரகுமார்
மட்டக்களப்பு.
தொ.இல -0778795767,

## விசேட புமைப்பரிசில் பரீட்சை வெளியீடு - 04

Model Examination For Grade Five Students for Selection to School and for the
**Award of Bursaries, August 2009.**


மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம்-05 மாணவர்களுக்கு நடத்தப்படும்
**புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை, ஓகஸ்ட் 2009.**

**வினாத்தாள் - I** **நேரம்: 45 நிமிடங்கள்**


**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.**

✱ **01தொடக்கம் 34 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க்கோடிடுக.**

01. பொருத்தமற்ற உருவைத் தெரிவுசெய்க.




02. **பின்வரும் உருவிலுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.**



✱ **3ஆம், 04ஆம் வினாக்களுக்குரிய விடைகளை தெரிவுசெய்து, அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டினுள் இடுக.**

03. ஒரு கிராமத்தில் வாழ்ந்த மக்களிடையே அடிக்கடி வாந்திபேதி நோய் பரவியது. இதனால் சிலர் மரணமடைந்தனர். அனேகருக்கு மருந்துச்செலவு அதிகரித்தது. இக் கிராமமக்களுக்கு இந்நோய் பரவுவதற்கு காரணமாக அமைந்தது,
   1) அக்கிராமத்திலே வைத்தியசாலை இல்லாமை.
   2) அக்கிராம மக்களுக்கு கல்வியறிவு இல்லாமை.
   3) அக்கிராமமக்களுக்கு நீரை கொதிக்கவைத்து பருகும் பழக்கம் இல்லாமை.
   4) அக்கிராமமக்களுக்கு நோய் எதிர்ப்புச்சக்தி மிகவும் குறைவாக இருந்தமை.

04. வானம் இருண்டு மப்பும்மந்தாரமுமாக காட்சியளித்தது. மின்னலும்,இடியோசையும் இடையிடையே தோன்றியது. மின்னல் தோன்றிய சிறிது நேரத்தின் பின்னரே இடியோசை கேட்கிறது. இதற்குக் காரணம் ஒலியை விட ஒளி மிகவும் விரைவாக பயணம் செய்வதால், ஒளியை முதலில் காண்கின்றோம். இத்தகவலின்படி தீர்மானிக்கக்கூடியது,
   1) இடி மின்னல் தோன்ற வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்கவேண்டும்.
   2) இடிமுழக்கமே முதன் முதலில் கேட்கிறது.
   3) மின்னலே முதன் முதலில் தோன்றுகிறது.
   4) இடிமுழக்கமும், மின்னலும் ஒரே நேரத்தில் தோன்றுகிறது.


✱ **விஜயன் குடும்பத்தில் மூன்றாவது பிள்ளையாகும். விஜயனின் பெற்றோர் விவசாயம் செய்தனர். அவனது அக்காவுக்கு இரு சகோதரிகளும், ஒரு சகோதரரும் உண்டு. மேலே தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் 5ஆம், 6ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

05. விஜயனின் குடும்பத்தில் உள்ளோரின் மொத்த எண்ணிக்கை யாது?
   1) 4  2) 5  3) 6  4) 8

06. விஜயனின் குடும்பத்திலுள்ள ஆண்களின் எண்ணிக்கை யாது?
   1) 1  2) 2  3) 3  4) 4

07. ஒரு பழமரத்தோட்டத்தில் உள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை, பலாமரங்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். தோட்டக்காரன்ன 8 பலாமரக்கன்றுகளை புதிதாக தோட்டத்தில் நட்டபின்னர், தென்னை மரங்களினதும், பலாமரங்களினதும் எண்ணிக்கை சமமாக இருந்தது எனில், பலா மரக்கன்றை நடமுன்பு, தோட்டத்திலிருந்த தென்னை மரங்கள் எத்தனை?
   1) 4  2) 8  3) 12  4) 16


08. எந்தக் கிராமத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்தால், எல்லாக் கிராமங்களுக்கும் குறைந்தளவு தூரத்தில் செல்லக்கூடியதாகஇருக்கும்?
   1) b  2) c
   3) d  4) e




09. ஒருவர் d என்ற கிராமத்திலிருந்து எல்லாக் கிராமங்களுக்கும் குறைந்தளவு தூரத்தில் சென்றால், அவர் சென்ற மொத்தத்தூரம் எவ்வளவு?
   1) 22km  2) 24km  3) 25km  4) 27km

10. பாதையொன்றில் நடப்பட்டுள்ள இருதந்திக்கம்பங்களுக்கு இடையிலான தூரம் 6 m ஆகும். பாதை ஒன்றில் 21 தந்திக்கம்பங்கள் நடப்பட்டிருப்பின் பாதையின் மொத்த நீளம் எவ்வளவு?
   1) 126m  2) 120m  3) 114m  4) 112m

11. கீழே தரப்பட்டுள்ள a,b எனும் இரண்டு கடதாசிக் கீலங்களை மடித்து அமைக்கக் கூடிய இரு உருக்களும் எவை?




12. 6 மீற்றர் நீளமும் 4 மீற்றர் அகலமும் கொண்ட சுவருக்கு தீந்தை பூசுவதற்கு 1/2 லீற்றர் தீந்தை தேவை எனில், 4 மீற்றர் நீளமும் 3 மீற்றர் அகலமும் கொண்ட சுவருக்கு தீந்தை பூச எவ்வளவு தேவைப்படும்?
   1) 500ml  2) 400ml  3) 250ml  4) 125ml


✱ **சில கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி 13 ஆம், 14 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**


13. தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்ற தகுதியுள்ள சகல மாணவருக்கும் பொதுவான இயல்பு எது?
   1) தரம் 5 வகுப்புக்களில் கல்வி கற்றல்.
   2) அரசாங்கப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்றல்.
   3) புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஆயத்தமாக இருத்தல்.
   4) தரம் 5 வகுப்பில் கற்கும்போது பத்து வயதை பூர்த்தி செய்திருத்தல்.

14. உலகிலுள்ள எல்லாப் பறவைகளுக்கும் பொதுவான இயல்பு,
   1) உடல் முழுவதும் இறக்கைகளால் மூடப்பட்டிருத்தல்
   2) பறந்து செல்லக்கூடியதாக இருத்தல்.
   3) பழங்கள், சிறுபூச்சிகள் போன்றவற்றை உண்ணுதல்.
   4) முட்டையிட்டு அடைகாக்கும் தன்மையைக் கொண்டிருத்தல்.

15. இன்று திங்கட்கிழமை, நாளை மறுநாள் 21 ஆம் திகதி; சென்ற வெள்ளிக்கிழமை ஞானி தனது பத்தாவது பிறந்தநாளை கொண்டாடியதாக நற்றுக் கூறினான் ஞானியின் பிறந்த திகதி என்ன?
   1) 14  2) 16  3) 19  4) 24


✱ **இல. 16ஆம், 17 ஆம் வினாக்களுக்கு பின்வரும் உருக்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.**


16.




17.



18. எனது நண்பர்களும் நானும் ஹஜ் பெருநாள் வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்டோம் இதன் பொருட்டுநாங்கள் ஒவ்வொருவரும் மற்றைய ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாழ்த்து மடலை அனுப்பினோம். நாங்கள் பரிமாறிக்கொண்ட மொத்த வாழ்த்து மடல்களின் எண்ணிக்கை 90 எனில், எனக்கு எத்தனை நண்பர்கள் உள்ளனர்?
   1) 9  2) 10  3) 11  4) 12


✱ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலாவதாகத் தரப்பட்டுள்ள படத்தை அதனை அடுத்து தரப்பட்டுள்ள ஐந்து படங்களுள் நான்கில் உள்ளவற்றை ஒன்று சேர்ப்பதன் மூலம் உருவாக்க முடியும். முதலாவதாகத் தரப்பட்டுள்ள படத்தை உருவாக்குவதற்குப் பயன்படுத்த முடியாத படத்தைத் தெரிவுசெய்து அதன் கீழ்க்கோடிடுக.**

19.



20.



21.



✱ தரம் 5 இல் கற்கும் மாணவர்கள் விளையாட விரும்பும் விளையாட்டுக்கள் பற்றிய தரவுகள் வென்வரிப்படத்தில் தரப்பட்டு உள்ளன. அதனைப்பயன்படுத்தி 22, 23 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.





22. வகுப்பிலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
   1) 12  2) 15  3) 17  4) 19

23. எல்லே விளையாட விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்?
   1) 3  2) 6  3) 8  4) 10


24. எதிரேயுள்ள உருவை மேலிருந்து பார்க்கும்போது தோன்றும் உரு எது?







25. ஒரு பையினுள் 25 மாபிள் குண்டுகள் உள்ளன. இதில் 7 சிவப்பு மாபிள் குண்டுகளும், 8 மஞ்சள் மாபிள் குண்டுகளும், 10 பச்சை மாபிள் குண்டுகளும் உள்ளன ஒரு பச்சை மாபிள் குண்டை எடுப்பதற்கு பையிலிருந்து ஆகக் குறைந்தது எத்தனை மாபிள் குண்டுகளை வெளியே எடுக்க வேண்டும்?
   1) 7  2) 10  3) 15  4) 16

26. நான்கு மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தந்த நேரங்கள். கடிகார முகங்களில் தரப்பட்டுள்ளன.





இதற்கேற்ப சரியான விடையின் கீழ்க்கோடிடுக.
   1) குமாரை விட டேவிற்டும், அமீனும் பிந்தி வந்தனர்.
   2) சரத் டேவிற் ஆகியோரைவிட டேவிற் முந்தி வந்தான்.
   3) அமீன், சரத் ஆகியோரைவிட டேவிற் முந்தி வந்தான்.
   4) அமீன், சரத், டேவிற் ஆகியோரைவிட குமார் முந்தி வந்தான்.

27. அருகிலுள்ள சதுரமுகியின் ஒரு பக்க நீளம் 6 சென்ரிமீற்றர் எனில், இச்சதுரமுகியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்?
   1) 36  2) 72
   3) 108  4) 216



✱ **பழவகைகள் சிலவற்றின் நிறைகள் தரப்பட்டுள்ளன.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. எந்தக் கூடையிலுள்ள பழங்களின் நிறை கூடுதலாக இருக்கும்?

| 1) | 2) | 3) | 4) |
|---|---|---|---|
| 2 அப்பிள் | 1 அப்பிள் | 1 தோடை | 2 அப்பிள் |
| 4 கொய்யா | 4 கொய்யா | 4 கொய்யா | 2 தோடை |
| 1 மாம்பழம் | 2 மாம்பழம் | 2 மாம்பழம் | 2 மாம்பழம் |

29. இரு நகரங்களை இணைக்கும் பிரதான பாதையில் கிலோமீற்றர் நடுகல்கள் காணப் படுகின்றன. சீராக வேகத்தில் செல்லும் பேரூந்து 12km நடுகல்லிலிருந்து 15km நடுகல்லை கடப்பதற்கு 6 நிமிடங்கள் எடுத்தது.இப்பேருந்து 42km தூரத்தைக் கடக்க எவ்வளவு நேரம் எடுக்கும்?
1) 1 மணி, 14 நிமிடங்கள் 2) 1 மணி, 24 நிமிடங்கள்
3) 1 மணி, 34 நிமிடங்கள் 4) 1 மணி, 44 நிமிடங்கள்

* **அனுலா, கீதா, நசீமா ஆகியோரிடமுள்ள இனிப்புக்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்.**
  * மூவரிடமும் உள்ள இனிப்புக்களின் தொகை சமமானவை அன்று.
  * ஒவ்வொருவரிடமும் 25க்கு குறையாத இனிப்புக்கள் உண்டு.
  * எல்லோரிடமும் இரட்டை எண் எண்ணிக்கை இனிப்பு உண்டு.
  * அனுலாவிடமும், கீதாவிடமும் உள்ள மொத்த இனிப்புக்கள் 62.
  * மூவரிடமும் உள்ள மொத்த இனிப்புக்கள் 100.

இத்தகவல்களைப் பயன்படுத்தி 30, 31 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

30. நசீமாவிடம் உள்ள இனிப்புக்கள் எத்தனை?
1) 28 2) 32 3) 38 4) 39

31. அனுலாவிடம் 28 இனிப்புக்கள் இருப்பின், கீதாவிடம் எத்தனை இனிப்புக்கள் இருக்கக் கூடும்?
1) 21 2) 30 3) 32 4) 34

* **பின்வரும் பந்தியை வாசித்து 32ஆம், 33ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

குமார் இரவு முழுவதும் தூங்காது விழித்திருந்தான். இதனால் இவனது கண்கள் வீங்கிக் காணப்பட்டது. மனம் படபடவென அடித்துக்கொண்டது. மனக்கவலை யால் சோர்ந்து காணப் பட்டான். இவனுக்கு பசியோ, தாகமோ ஏற்படவில்லை. இனி என்ன செய்வதென்று தெரியாது தடுமாறினான்.

32. இப்பந்தியில் வரும் குமார் பற்றி யாது கூறலாம்?
1) ஒரு மாணவன். 2) ஒரு நோயாளி.
3) ஒரு அநாதை. 4) எதுவும் கூறமுடியாது.

33. ''விழி'' என்பதன் ஒத்த சொல்
1) தூங்காதிருத்தல். 2) விழித்தல். 3) நயனம். 4) மஞ்சனம்.

34. ''முத்திரை'' எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி முத்தி, திரை போன்ற சொற்களை
உருவாக்க முடியும். இதேபோல் ''மதுரை'' என்ற சொல்லிலிருந்து உருவாக்கக் கூடிய சொற்கள் மூன்று தருக.

.....................................................................................

35. பெட்டியினுள் தரப்பட்டுள்ள சொற்களைப்பயன்படுத்தி பறவையொன்றின் பெயரை தருக.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ம | செ | ந் | | மீ | | ளி | ப | ன் |
| | கொ | ண் | யி | க | டு | | ம் | த் |

* **பின்வரும் பிரசினங்களை விளக்கி, அதற்கேற்ப 36, 37, 38 ஆகிய வினாக் களுக்கு விடை தருக.**


| 1) | 2) | 3) | 4) |
|---|---|---|---|
| A B C | B A C | E A F | D B A |
| + A B C | - F E F | + C B D | - E C F |
| 9 0 4 | 4 1 1 | 5 9 7 | 3 3 3 |

36. A யின் பெறுமதி எவ்வளவு? ........................................


37. C யின் பெறுமதி எவ்வளவு? ........................................

38. e யின் பெறுமதி எவ்வளவு? ........................................

* **பின்வரும் எண்கோலத்தை அவதானித்து வெற்றிடத்திற்குள் வரவேண்டிய எண்ணை எழுதுங்கள்.**

39.


.........................

40.


.........................

41. அமெரிக்காவின் நேரம் இலங்கையின் நேரத்திலும் பார்க்க 6 மணித்தியாலங்கள் அதிகமாகும். தினந்தோறும் 25 நிமிடங்கள் பிந்திக்காட்டும் கடிகாரமொன்று, பி.ப. 4.10 மணியைக் காட்டும்போது, அமெரிக்காவின் நேரம் எவ்வளவாக இருக்கும்? ........................................

## வினாத்தாள் - II நேரம்: 1மணி 15 நிமிடங்கள்

<u>எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.</u>

01. பின்வரும் பந்தியை வாசிக்குக.

இன்று நம் வீடுகளில் மின்விளக்குகள் ஒளிர்கின்றன. ஆனால் ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்னர்இந்த மின் விளக்குகள் நம்மிடையே இல்லை. தோமஸ் அல்வா எடிசன் எனும் அறிவியல் மேதை பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஒன்ப தாவது தசாப்தத்தில் மின்விளக்கை கண்டுபிடிக்க ஆராச்சி செய்தார். தமது முதல் முயற்ச்சியில் தோல்வி கண்டார். எனினும் சழைக்காது தமது ஆய்வைத் தொடர்ந்தார். பலமுறை தோல்வியைத் தழுவிய பின் மின்விளக்கைக் கண்டு பிடித்தார்.

அன்றைய காலகட்டத்தில் கூட தோமஸ் அல்வா எடிசனின் கண்டுபிடிப்புக் களைக் கண்ணுற்று சிலர் வயிற்றெரிச்சல் அடைந்தனர். இதனால் பல்வேறு இடையூறுகளை செய்தனர். ஆனால் தோமஸ் அல்வா எடிசன் அதனைப் பொருட் படுத்தாது முன்னுக்கு வருதலே சிறந்தது என நோக்காகக் கொண்டிருந்தார்.

இன்றைய மாணவர்களாகிய நாமும் கூட தோமஸ் அல்வா எடிசனை பின் பற்றி புதிய அறிவியல் கண்டுபிடிப்புக்களில் ஈடுபட வேண்டும். ஆனால் நாம் அனுபவமற்ற வெறும் புத்தகப்படிப்பு மூலம் எதனையும் சாதிக்க முடியாது.

இந்த விபரணத்தை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) எழுத்துப்பிழையுள்ள சொற்களின் கீழ்க்கோடிடுங்கள்.

2) எழுத்துப்பிழையுள்ள சொற்களை திருத்தி சரியாக எழுதுங்கள்.
1. ................................ 2. ................................

3) ''தசாப்தம்'' என்பதன் கருத்தை எழுதுங்கள்.
.....................................................................................

4) இப்பந்தியிலுள்ள பொதுப்பாற் சொல் ஒன்றை எழுதுக.
.....................................................................................

5) இப்பந்தியிலுள்ள இரண்டு மரபுத்தொடர்களைத்தந்து, அவற்றின் கருத்தை எழுதுக.
1. .....................................................................................
2. .....................................................................................

6) ''விஞ்ஞானம்'' என்ற கருத்தைத்தரும் கலைச்சொல் எது?
.........................................

7) இப்பந்தி மூலம் வெளிப்படுத்த முயலும் கருத்தை எழுதுக.
.....................................................................................

8) வெறும் புத்தகப்படிப்பு மூலம் எதையும் சாதிக்க முடியாது என்பதை விளக்கும் பழமொழி ஒன்றைத் தருக.
.....................................................................................

02. அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்களை மாத்திரம் பயன்படுத்தி சரியான கருத் துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்கள் இடம்பெற வேண்டும். ஒரு சொல்லை ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்துக.

| | | | |
|---|---|---|---|
| தினமும் | நாளைக்கு | பசுக்கள் | செல்கிறாள் |
| தங்கை | நான் | கண்டிக்குச் | பாடங்களைப் |
| இரவில் | பால் | பறவைகள் | சுரக்கும் |
| பறந்து | ஆகாயத்தில் | படிப்பேன் | செல்கின்றான் |

1) .....................................................................................
2) .....................................................................................
3) .....................................................................................

03. பின்வரும் வாக்கியத்தை பொதுப்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.
1) மாணவன் பாடசாலைக்கு வந்தான். ........................................
2) அவள் அழகாக நடனம் ஆடினாள். ........................................

04. பின்வரும் சுருக்கக் குறியீடுகள் உணர்த்தும் பொருளை எழுதுக.
1) இ.பொ.கூ - ........................................
2) இ.ம.வ - ........................................

05. வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை எழுதுக.
1) This is my - ........................................

2) பாம்பு என்பதன் ஆங்கிலச் சொல்லை எழுதுக.
........................................

06. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.
1) Come Here - ........................................

07. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
1) உங்கள் சுகம் எப்படி? - ........................................

08. இதன் கருத்தை தமிழில் எழுதுக.
1) அம்மா கெ (g)தர எனவா. - ........................................
2) ஒப(ட்)ட படகினித? - ........................................

09. உங்களது வயது எத்தனை? என்பதை சிங்களத்தில் கூறுவதை தமிழில் எழுதுக.
.....................................................................................

* **இல. 10 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

10. எந்தவித மணத்தையும் கொண்டிராத பூ எது?
1) ரோசா. 2) மல்லிகை. 3) எக்சோரா. 4) அலரி.

11. ஒரு நாயைக் கண்டவுடன், மற்றொரு நாய் தனது வாலை கீழ் நோக்கி மடித்து வைத் திருப்பது ஏன்?
1) மற்றைய நாயை தாக்குவதற்கு தயாராகுதல்.
2) மற்றைய நாய்க்குப் பயந்து போதல்.
3) மற்றைய நாயை எதிர்க்க முடியாமல் ஓடுதல்.
4) மற்றைய நாய்க்கு நன்றி தெரிவித்தல்.

12. வாழ்நாளில் ஒரு நாளும் நீரை அருந்தாத பிராணி,
1) ஓநாய். 2) தீக்கோழி. 3) பல்லி. 4) வரிக்குதிரை.

13. தனது வாழ்க்கை வட்டத்தின் ஒரு பகுதியை பூர்த்தி செய்ய நீரை நாடிச்செல்லும் பிராணி எது?
1) முதலை. 2) ஆமை. 3) நீர்ப்பாம்பு. 4) தும்பி.

14. எந்தத் தாவரம் / மரத்தின் பால் உடலில் படும்போது எரிச்சல், நோவு, வீக்கம் என்ப வற்றை உண்டாக்கும்?
1) இறப்பர். 2) தில்லை. 3) கள்ளி. 4) அல்லி.

15. விளையாட்டு நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வீரர்களுக்கு உடனடியாக சக்தியைப் பெற்றுக்கொள்ள என்ன செய்யலாம்?
1) எளிமையான உடற்பயிற்சிகளில் ஈடுபடுதல்.
2) வெந்நீரினால் உடலைக் கழுவிக் கொள்ளுதல்.
3) குளுக்கோசை உட்கொள்ளுதல்.
4) ஆழமாக சுவாசித்தல்.

16. எருமை, யானை போன்ற விலங்குகள் உடலில் சேற்றைப் பூசிக்கொள்வதற்கான பிரதான காரணம் எது?
1) உடற்சூட்டைத் தணித்தல்.
2) எதிரிகளை பயமுறுத்தல்.
3) பூச்சி கடிப்பதைத் தடுத்தல்.
4) உடலை மெருகூட்டல்.

17. இரும்பை உருக்கி ஒட்டும் தொழிலாளர்கள் தங்களது பாதுகாப்புக்காக அணிந்து கொள்வது எது?
1) தலைக்கவசம். 2) கையுறைகள்.
3) பாதுகாப்புச் சப்பாத்து. 4) பாதுகாப்புக் கண்ணாடி.

18. [illegible] இலங்கையின் முதலாவது தலைநகர்,
1) அநுராதபுரம். 2) மஹியங்கணை.

(9 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org